Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ்Mirror

www.tamilmirror.lk

THURSDAY, JUNE 2, 2022

வியாழக்கிழமை ஜூன் 02, 2022 | ஒளி: 08 கதிர் 012 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE

# துமிந்த கைது



தேசிய வீடமைப்பு அதிகார சபையின் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான துமிந்த சில்வாவை, ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலையில் வைத்து குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர் நேற்று (01) மாலை கைது செய்துள்ளனர். உடனடியாக அமலுக்கு வரும் வகையில் அவரைக் கைது செய்து சிறைச்சாலை காவலில் வைக்குமாறு சீ.ஐ.டியினருக்கு உயர் நீதிமன்றம் நேற்று முன்தினம் (31) உத்தரவு பிறப்பித்திருந்தது.

தொடர்ச்சி P2

மே 9 விவகாரம்:

# மஹிந்தவை அழைக்கவில்லை



மே மாதம் 9 ஆம் திகதி 'கோட்டா கோ கம', 'மைனா கோ கம'வில் அமைதியான முறையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல் மற்றும் அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட அமைதியின்மை தொடர்பான விசாரணைகளுக்காக, முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை நேற்றையதினம் (01) இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அழைக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

# 369 பொருட்களுக்கு கட்டுப்பாடு தளர்வு

369 பொருட்களுக்கு விதிக்கப்பட்ட இறக்குமதி கட்டுப்பாடுகளை நேற்று (01) முதல் அமலுக்கு வரும் வகையில் தளர்த்துவற்கு தீர்மானித்துள்ளதாக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு அறிவித்துள்ளது. அதன்படி, மொத்தம் 369 எச்எஸ் குறியீடுகள், இறக்குமதி கட்டுப்பாட்டு அனுமதிப்பத்திரம் இல்லாமல் ஜூன் 01ஆம் திகதி முதல் பொருட்களை இறக்குமதி செய்யமுடியும் என நிதிஅமைச்சின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## வற் திருத்த வர்த்தமானி வந்தது

பெறுமதி சேர் வரியை (வற்) அதிகரிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்தமைக்கு அமைய, நேற்று (01) முதல் வரி அதிகரிப்பு அமலாகும் வகையில் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டது.

தொடர்ச்சி P2

பொருளாதார நெருக்கடி:

# மிருகங்களுக்கும் கடுமையான பசி



பா.நிரோஸ்

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியால் மிருகக்காட்சிசாலைகளில் உள்ள மிருகங்களுக்கு உணவு வழங்குவதில் பிரச்சினை ஏற்பட்டுள்ளதாக விவசாயத்துறை, வனஜீவராசிகள் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

# ஜீவனால் பெரும் தலையிடி

மகேஸ்வரி விஜயனந்தன், சேஹ்ன் செனவிரத்ன,

இலங்கையில் பொருளாதார நெருக்கடிக்கு முகம்கொடுத்துள்ள மக்களுக்கு பகிர்ந்தளிப்பதற்காக,தமிழக அரசாங்கத்தால் வழங்கப்பட்டுள்ள அத்தியாவசியப் பொருட்களை பகிர்ந்தளிக்கும் போது, பாராளுமன்ற உறுப்பினர் ஜீவன் தொண்டமானின் அழுத்தம் அதிகமாகக் காணப்படுவதாக இலங்கை

தொடர்ச்சி P2

# திங்கள் முதல் தனியார் பஸ் சேவை முடங்கும்

பஸ்களுக்கு முறையான டீசல் கிடைக்காத காரணத்தால் எதிர்வரும் திங்கட்கிழமை (06) முதல், அனைத்து தனியார் பஸ்களும் சேவையில் ஈடுபடாது என்று அகில இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோருக்கு

# நிவாரணம் வழங்குமாறு

## பிரதமர் ரணில் பணிப்பு



நாட்டில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக பல பிரதேசங்கள் பாதிக்கப்பட்ட நிலையில், வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு நிவாரண நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆலோசனை வழங்கியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் பிரதமரின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவுக்கும் களுத்துறை, கம்பஹா, காலி, இரத்தினபுரி ஆகிய மாவட்ட செயலாளர்களுக்கும் இடையில் ஆரம்பக்கட்ட கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது.

தொடர்ச்சி P2



# சீரற்ற வானிலையால் 12,326 பேர் பாதிப்பு

## ஒருவர் உயிரிழப்பு

பா.நிரோஸ்

நாட்டில் நிலவும் கடும் மழை மற்றும் பலத்த காற்றுடன் கூடிய சீரற்ற வானிலையால் 6 மாவட்டங்களைச் சேர்ந்த 12,326 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்தது. நேற்று (01) வரையில் அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட 57 குடும்பங்களைச் சேர்ந்த 236 பேர் ஐந்து பாதுகாப்பு மத்திய நிலையங்களில் தங்க வைக்கப்பட்டள்ளனர்.

தொடர்ச்சி P2



# 21 ஆல் சிஸ்டத்தை மாற்ற முடியாது

பா.நிரோஸ்

நாட்டின் தற்போதைய நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு, நடைமுறைச் சாத்தியமுள்ள வழிகளைக் கண்டறிந்து செயற்படுத்த வேண்டும் எனத் தெரிவித்த நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ, நாட்டின் முறைமை மாற்றியமைக்கப்பட வேண்டும். எனினும் 21ஆவது திருத்தச் சட்டத்தின் ஊடாக முழுமையாக அதனை செய்ய முடியாது எனவும் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

# நனைந்த வினாத்தாள்களால் மாணவர்கள் அல்லல்

## பரீட்சை ஆணையாளர்களுக்கு ஆசிரியர் சங்கங்கள் கடிதம்

2021 கல்விப் பொதுத் தராதர சாதாரண தர பரீட்சைக்கு தோற்றிய பரீட்சார்த்திகள், நேற்று முன்தினம் (31) நிலவிய சீரற்ற வானிலை காரணமாக, பல சிரமங்களை எதிர்நோக்கியிருந்ததாக ஆசிரியர் சங்கங்கள் குற்றம் சுமத்தியுள்ளன.

தொடர்ச்சி P2

மருந்து தட்டுப்பாட்டை தீர்க்க

# இந்திய மற்றும் ஏனைய கடனுதவிகளை பயன்படுத்துங்கள்

## கோப்குழு பரிந்துரை



இந்திய கடனுதவி மற்றும் ஏனைய கடனுதவிகளைப் பயன்படுத்தி, நாட்டிலுள்ள மருந்துப் பற்றாக்குறையை விரைவில் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கோப் குழுவின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் சரித ஹேரத் பரிந்துரை வழங்கினார்.

தொடர்ச்சி P2

# மதுபானம், சிகரெட் விலை உயர்கிறது

பெறுமதி சேர் வரி (வற்) 8 சதவீதத்திலிருந்து 12 சதவீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளதன் காரணமாக, அனைத்து உள்ளூர் மதுபானங்களின் விலைகளும் நேற்று (01) முதல் அமலாகும் வகையில் அதிகரிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மதுபானப் போத்தல் ஒன்றின் விலை 520 ரூபாயாலும் பியர் டின் ஒன்றின் விலை 30 ரூபாயாலும் அதிகரிப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

# "ஈழத்தமிழ் அகதிகளை விடுதலை செய்யவும்"



சென்னை

திருச்சி மத்திய சிறை சிறப்பு முகாமில் வாடும் ஈழத்தமிழ் அகதிகளை விடுதலை செய்ய வேண்டுமெனஅன்புமணி ராமதாஸ் அறிவுறுத்தியுள்ளார்.

திருச்சி மத்திய சிறை வளாகத்தில் உள்ள சிறப்பு முகாமில் அடைக்கப்பட்டுள்ள ஈழத்தமிழ் அகதிகள், தங்களை விடுதலை செய்ய வேண்டும் என்று கோரி 13ஆவது நாளாக உண்ணாவிரதம் மேற்கொண்டு வருகின்றனர். அவர்களில் மூவர் உயிருக்கு ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்றும் தனது டுவிட்டரில் குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

ஆறு வாரத்துக்குள் ரணிலால்

# இடைக்கால பட்ஜெட் முன்வைப்பது கடினம்

## பிரதான எதிர்க்கட்சி தெரிவிப்பு

நாட்டின் நெருக்கடி நிலைமைகளை கையாளக்கூடிய பொருளாதார வேலைத்திட்டமொன்றை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இதுவரை முன்வைக்கவில்லை. இவ்வாறான நிலைமையில், ஆறு வார காலத்திற்குள் இடைக்கால வரவு- செலவு திட்டமொன்றை முன்வைக்க முடியாதென எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

இடைக்கால வரவு- செலவு திட்டத்தை தயாரிக்க போதுமான தரவுகள் கூட இன்னமும் கிடைக்கப்பெறவில்லை. கடன்களைக் கூட முறையாக பதியவில்லை என பிரதமர் தெரிவித்துள்ளார். அவ்வாறான நிலைமையில் பிரதமரால் முறையாக வரவு- செலவு திட்டமொன்றை முன்வைக்க முடியாது எனவும் அவர் கூறினார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## மஹிந்தவை...

குறித்த சம்பவம் தொடர்பில் இதுவரை அனைத்து பொலிஸ் அதிகாரிகள் மற்றும் சிறைச்சாலை திணைக்கள அதிகாரிகளிடமும் வாக்குமூலம் பதிவு செய்யப்படாத காரணத்தினால் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

இதனைத் தவிர, பாதிக்கப்பட்டவர்களிடம் வாக்குமூலம் பதிவு செய்யப்படவுள்ளதாகவும் அதனைத் தொடர்ந்து விசாரணைகளுக்காக மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட அரசியல்வாதிகளிடம் வாக்குமூலம் பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

முன்னாள் பிரதமர் மஹிந்த, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன எம்.பி.க்களான நாமல் ராஜபக்ஷ, ரோஹித்த அபேகுணவர்தன, ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ மற்றும் அமைச்சர் ரமேஷ் பத்திரன ஆகியோரை நேற்றையதினம் (01) ஆணைக்குழுவில் ஆஜராகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டிருந்த நிலையிலேயே மேற்குறித்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

இதேவேளை, பொலிஸ் மா அதிபர் மற்றும் மேல் மாகாணத்துக்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் ஆகியோரையும் இன்று (02) வியாழக்கிழமை ஆஜராகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

## நிவாரணம்...

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக திறைசேரி செயற்பாட்டு திணைக்களத்தினால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாவட்ட செயலாளர்கள் ஊடாக நிவாரண நிதியை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு திறைசேரிக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

இடைவிடாது பெய்து வரும் மழை காரணமாக களு, நில்வலா மற்றும் அத்தனகலு ஓயாவை அண்மித்த தாழ்நிலப் பகுதிகளில் வசிப்பவர்களுக்கு நீர்ப்பாசனத் திணைக்களம் வெள்ள அபாய எச்சரிக்கையை நேற்று (01) அதிகாலை விடுத்தமை குறிப்பிடத்தக்கது.

### சீரற்ற காலநிலையால்...

மேலும் அனர்த்தங்களால் 147 குடும்பங்களைச் சேர்ந்த 579 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர், 53 வீடுகளும் பாதிக்கப்பட்டுள்ளன என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்துள்ளது.

நாட்டில் பெய்துவரும் கனமழையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணங்களை வழங்கிக்கொண்டிருந்த அதிகாரி ஒருவர் வெள்ளப்பெருக்கில் சிக்கி உயிரிழந்துள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் பணிப்பாளர் ஓய்வுப்பெற்ற மேஜர் ஜெனரல் சுதந்த ரணசிங்க தெரிவித்துள்ளார். இரத்தினபுரியில் ஏற்பட்டிருந்த வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்களை வழங்கிக்கொண்டிருந்த அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் அதிகாரி ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

நாட்டில் பெய்துவரும் கனமழையால் 6 மாவட்டங்களைச் சேர்ந்த 22 பிரதேச செயலகங்களில் வசிக்கும் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். தொடர்ந்து பெய்துவரும் மழையால் நாட்டின் பல்வேறுப் பிரதேசங்களில் உள்ள நீர்நிலைகளின் நீர்மட்டம் அதிகரித்துள்ளது.

குறிப்பாக அத்தனகளு ஓயா, களனி, களு, கிங், நில்வலா ஆகிய கங்கைகளின் நீர்மட்டங்கள் அதிகரித்துள்ளதாக நீர்ப்பாசன திணைக்களத்தின் பணிப்பாளர் எஸ்.பி.சீ.சுகிஸ்வர தெரிவித்துள்ளார்

அத்தனகளு ஓயாவின் மேற்பகுதியில் வசிப்போரிய சிறிய வெள்ளப் பெருக்கால் பாதிக்கப்பட்டுள்ளனர். எவ்வாறாயினும் இந்த ஓயாவுக்கு கீழுள்ள பிரதேசங்களான ஜாஎல, வத்தளை, கம்பஹா ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகள் வெள்ளநீரால் நிரம்பியுள்ளன. அங்கு மேலும் நீர்மட்டம் அதிகரிக்கும் அபாயம் காணப்படுவதாகவும் தெரிவித்தார். களனி கங்கைக்கு மேற்பகுதியில் உள்ள பிரதேசங்களில் குறிப்பிடத்தக்களவு நீர் மட்டம் குறைந்துள்ளது.

ஹங்வெல்ல - மோதரை ஆகியப் பிரிவுகளில் நீர்மட்டம் தொடர்ந்து அதிகளவாகவே இருக்குமெனவும் தெரிவித்தார். கிங், நில்வலா கங்கைகளுக்கு மேற்பகுதியில் உள்ள பிரதேசங்களின் நீர்மட்டங்கள் குறைவாகவும், இந்த கங்கைகளுக்குக் கீழானப் பிரதேசங்களின் நீர்மட்டம் அதிகளவாகவும் காணப்படுவதாகவும் தெரிவித்தார்.

# 369 பொருட்களுக்கு கட்டுப்பாடு தளர்வு

சுங்க அனுமதியின் போது வரிகள் உட்பட பொருந்தக்கூடிய சட்டங்கள் மற்றும் விதிமுறைகளுக்கு உட்பட்டு இறக்குமதி செய்யப்படலாம் என்று குறிப்பிட்டுள்ள நிதியமைச்சு, 2022 ஜூன் 07 வரை திறந்த கணக்கு இறக்குமதியை அனுமதிக்க அமைச்சு தீர்மானித்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளது.

நாட்டின் கடினமான பொருளாதார நிலைமையைக் கருத்தில் கொண்டு, அனைத்து பங்குதாரர்களும் அத்தியாவசியப் பொருட்களின் தடையில்லா விநியோகத்தை உறுதி செய்வதற்கு, இறக்குமதியின் நோக்கத்துக்காக வரையறுக்கப்பட்ட அந்நிய செலாவணியை சேமிக்க முக்கியத்துவம் வழங்க வேண்டும் என நிதியமைச்சு கேட்டுக்கொண்டுள்ளது. கடந்த மார்ச் மாதம் 9ஆம் திகதி முன்னாள் நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷவினால் வெளியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைய 369 அத்தியாவசியமற்ற பொருட்களை இறக்குமதி செய்வதற்கு கட்டுப்பாடு விதிக்கப்பட்டது.

அதற்கமைய கப்பல் ஏற்றுமதி ஒப்பந்தச் சீட்டு அல்லது விமான வழி சீட்டை சமர்ப்பித்து இறக்குமதி அல்லது ஏற்றுமதி கட்டுப்பாட்டாளரால் வழங்கப்படும் அனுமதிப்பத்திரத்தைப் பெறவேண்டும் என வரத்தமானியில் குறிப்பிடப்பட்டிருந்தது.

திராட்சைப் பழம், அப்பிள் உட்பட பழவகைகள், சொக்கலேட் உட்பட பால் உற்பத்திகள், நூடில்ஸ் வகைகள், பழச்சாறுகள், தண்ணீர், பியர், வைன் வகைகள், சிகரெட்டுகள் மற்றும் சுருட்டு வகைகள் உட்பட புகையிலை உற்பத்திப் பொருட்கள், வாசனைத் திரவியங்கள் மற்றும் அழகு சாதனப் பொருட்கள், டயர்கள், செருப்பு மற்றும் சப்பாத்துகள், இலத்திரனியல் உபகரணங்கள், வாகனங்கள், விளையாட்டுப் பொருட்கள் ஆகியவற்றின் இறக்குமதிக்கே கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## வற் திருத்த வர்த்தமானி வந்தது

பெறுமதி சேர் வரி (வற்) 8 சதவீதத்திலிருந்து 12 சதவீதமாகவும் தொலைத் தொடர்புகள் வரி 11.25 சதவீதத்திலிருந்து 15 சதவீதமாகவும் உடன் அமுலாகும் வரை அதிகரிக்கப்படும் என, நேற்று முன்தினம் (31) அறிவிக்கப்பட்டிருந்தது.

அதற்கமைய நேற்று முதல் அமுலாகும் வகையில், வற் அதிகரிப்பு வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

முன்பு விலக்கு அளிக்கப்பட்ட பொருட்களைத் தவிர, பொருட்கள் மற்றும் சேவைகளின் இறக்குமதி அல்லது விநியோகத்துக்கான வரியே அதிகரிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், 2019 நவம்பர் 29 ஆம் திகதி வெளியிடப்பட்ட பெறுமதி சேர் வரிச் சட்டம் தொடர்பான வர்த்தமானி அறிவித்தலும் இரத்து செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, எதிர்வரும் ஒக்டோபர் மாதம் முதலாம் திகதியிலிருந்து அமுலுக்கு வரும் வகையில் உள்நாட்டு இறைவரி, பந்தயம் மற்றும் சூதாட்ட வரி என்பனவும் அதிகரிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## "ஈழத்தமிழ் அகதிகளை...

சிறப்பு முகாம் அகதிகள் மீது எந்தக் குற்றச்சாட்டும் இல்லை. எந்த வழக்கும் நிலுவையில் இல்லை. விடுதலை செய்தால் தாய்நாட்டுக்குச் சென்று சொந்தங்களுடன் வாழவே அவர்கள் விரும்புகின்றனர். காரணமே இல்லாமல் சிறப்பு முகாம்களில் அவர்களை அடைத்து வைப்பது மனித உரிமை மீறலாகும் என்றும் தெரிவித்துள்ளார்.

சிறப்பு முகாம் என்பது முகாம் அல்ல...அது சிறையை விட கொடுமையானது; மனிதர்கள் வாழத் தகுதியற்ற இடமாகும். கடந்த காலங்களில் பல முறை அவர்கள் போராடிய போது விரைவில் விடுதலை செய்வதாக வாக்குறுதி அளித்த தமிழக அரசு, இன்றைக்கு வரையிலும் விடுதலை செய்யவில்லை என்றார்.

## இடைக்கால பட்ஜெட்...

கடந்த காலங்களில் பெற்றுக்கொண்ட கடன்களை முறையாக இவர்கள் தரவுகளாக பதியவில்லை. ஒட்டுமொத்த நாட்டையும் மட்டுமல்ல, முழு உலகத்தையும் ஏமாற்றும் வகையில் செயற்பட்டுள்ளனர். நல்லாட்சி காலத்திலும் இந்த தவறு இடம்பெற்றுள்ளது. ஆகவே எவரும் இதில் தங்களை நியாயப்படுத்த முடியாது எனவும் அவர் கூறினார்.

அதேபோல், தற்போதைய நெருக்கடிகளை சமாளிக்க அரசாங்கத்திடம் இருக்கும் வேலைத்திட்டம் என்ன என்பதை இப்போதாவது அரசாங்கம் முன்வைக்க வேண்டும். இல்லையேல், பாராளுமன்ற குழுக்களில் எமது யோசனைகளுக்கு இடமளித்து தற்போதைய நெருக்கடிகளை கையாள வேண்டும். இதற்கு எமது

**“ நெருக்கடிகளை சமாளிக்க அரசாங்கத்திடம் இருக்கும் வேலைத்திட்டம் என்ன என்பதை இப்போதாவது அரசாங்கம் முன்வைக்க வேண்டும். இல்லையேல், பாராளுமன்ற குழுக்களில் எமது யோசனைகளுக்கு இடமளித்து தற்போதைய நெருக்கடிகளை கையாள வேண்டும்**

ஒத்துழைப்புக்களை வழங்க நாம் தயாராக உள்ளோம். அரசாங்கமும், சர்வதேச நாணய நிதியமும் மேற்கொண்ட தொழிநுட்ப கலந்துரையாடலில் இணங்கிய விடயங்களையும், அது குறித்த அறிக்கையையும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும். அவற்றை கலந்துரையாடலுக்கு உற்படுத்தி பொது இணக்கத்திற்கு வர நாம் தயாராக உள்ளோம் எனவும் அவர் கூறினார்.

## நனைந்த வினாத்தாள்களால்...

மழைநீரினால் விடைத்தாள்கள் நனைந்தமையால் சில மாணவர்கள் பரீட்சைக்கு முகம் கொடுக்க முடியாத நிலை ஏற்பட்டதாகவும் நேற்று முன்தினம் நிலவிய சீரற்ற வானிநிலையை கருத்தில் கொண்டு அதிகாரிகள் நியாயமான தீர்வை வழங்க வேண்டும் இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் தெரிவித்துள்ளது. கலைப் பிரிவு பரீட்சைகளுக்குத் தோற்றிய பரீட்ச்சார்த்திகளின் கலைப் படைப்புகள் உலராத காரணத்தினால் அவர்கள் அசௌகரியங்களை எதிர்கொண்டதாகவும் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

மேலும், வெள்ளம் காரணமாக பரீட்சை நிலையங்களுக்குச் செல்வதில் மாணவர்கள் சிரமங்களை எதிர்கொண்டதாகவும் மாணவர்கள் எதிர்நோக்கும் சிரமங்கள் தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மதுபானம்,...

இதேவேளை, அனைத்து உள்ளூர் சிகரெட்டுகளின் விலைகளும் நேற்று (01) நள்ளிரவு முதல் அதிகரிக்கப்பட்டுள்ளதாக இலங்கை புகையிலை நிறுவனத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வற் வரியை அதிகரிக்க அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கையின் காரணமாகவே இந்த விலை அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்த அவர், சிகரெட்டின் வகைக்கேற்ப விலை உயர்வு நிர்ணயிக்கப்படவுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

## துமிந்த கைது

மரண தண்டனை கைதியான துமிந்த சில்வாவுக்கு வழங்கப்பட்ட ஜனாதிபதி பொது மன்னிப்பை இடைநிறுத்தி இடைக்காலத் தடையுத்தரவு பிறப்பித்த உயர்நீதிமன்றமே அவரை கைது செய்யுமாறும் கட்டளையிட்டிருந்தது. இந்நிலையில், ஸ்ரீ ஜயவர்த்தனபுர வைத்தியசாலையின் 18 ஆம் இலக்க விடுதியில் துமிந்த சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார் என நேற்று (01) மதியம் தகவல்கள் வெளியாகியிருந்தன.

அதற்கமைய வைத்தியசாலைக்குச் சென்ற சீ.ஐ.யினர், அவரைக் கைதுசெய்துள்ளனர்.

## மிருகங்களுக்கும்...

மிருகக்காட்சி சாலைகளில் உள்ள மிருகங்களுக்கு உணவளிப்பதில் பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளது. மிருகக்காட்சி சாலைகளில் உள்ள மிருகங்களின் உணவுக்காக 2 வருடங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதியில் குறிப்பிடத்தக்க அளவு தற்போது செலவு செய்யப்பட்டுள்ளது. வழமையாக உணவுக்கு செலவழிப்பதை விட அதிகளவான பணம் தற்போது செலவிடப்படுகிறது எனவும் தெரிவித்தார்.

நாட்டுக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையும் குறைவடைந்துள்ளது. இதனால் நாட்டுக்குக் கிடைத்துவந்த வருமானம் பெரிதளவில் இழக்கப்பட்டுள்ளது. இவ்வாறான நிலையிலும் மிருகக்காட்சிசாலைகளில் உள்ள மிருகங்களுக்கு உணவுக்கு அரசாங்கம் தொடர்ந்து நிதி ஒதுக்கி வருகிறது. எனினும் தொடர்ந்து அதனை முன்னெடுப்பதில் பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன எனவும் தெரிவித்தார்.

மிருகங்களை விரும்புகிற நபர்கள், பிள்ளைகளிடமிருந்து உணவுகளைப் பெற்று மிருகங்களுக்கு வழங்வதற்கான வேலைத்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட உள்ளது. இது தொடர்பான கலந்துரையாடல்கள் இடம்பெற்றுள்ளன எனவும் தெரிவித்தார்.

## திங்கள் முதல்...

இந்தவாரம் பஸ்களுக்கு டீசல் வழங்குவதற்கு அரசாங்கம் முன்னுரிமை அளிக்காவிட்டால், திங்கட்கிழமையில் முதல் தனியார் பஸ் சேவை முழுமையாக நிறுத்தப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

கொழும்பில் நேற்று (01) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் தெரிவித்ததுடன், க.பொ.த சாதாரண தரப் பரீட்சை முடிவடைந்துள்ள நிலையில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

வற் உட்பட பல வரிகள் அதிகரிக்கப்பட்டுள்ளமையால் பஸ் தொழிற்துறை பாரியளவில் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் எதிர்காலத்தில் மீண்டும் பஸ் கட்டணத்தை அதிகரிக்கும் போக்கு காணப்படுவதாகவும் குறிப்பிட்டார். பஸ்களுக்கு டீசல் பெறுவதற்கு பல நாட்கள் வரிசையில் காத்திருக்க வேண்டியுள்ளதகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

தனியார் பஸ்களுக்கு இலங்கை போக்குவரத்து சபை டிப்போக்கள் மூலம் எரிபொருள் வழங்குவதாக கூறப்பட்டாலும், அதற்கான முறையான வேலைத்திட்டம் எதுவும் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்றும் சுட்டிக்காட்டினார்.

## இந்திய மற்றும் ஏனைய...

2022ஆம் ஆண்டு மே மாதம் 13ஆம் திகதி வரையில் அரச வைத்தியசாலைகளில் நிலவும் மருந்துப் பற்றாக்குறை குறித்தும், அதனை நீக்குவதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் மற்றும் தற்போதைய செயலாற்றுகை தொடர்பில் ஆராய்வதற்கு இலங்கை அரச மருந்தகங்கள் கூட்டுத்தாபனத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அதிகாரிகள் கோப் குழுவிற்கு அழைக்கப்பட்டிருந்த போதே அவர் இந்தப் பரிந்துரையை வழங்கினார்.

இந்தியக் கடனுதவியில் 200 மில்லியன் டொலர் நிதியுதவி கிடைக்கப்பெற்றிருந்தாலும் 2022 ஏப்ரல் 22 ஆம் திகதி வரையில் 55.5 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான மருத்துவ உபகரண வழங்கல்களுக்கு மாத்திரமே அமைச்சின் மருத்துவ உப குழுவினால் பரிந்துரை வழங்கப்பட்டிருந்ததாக கோப் குழுவின் தலைவர் சுட்டிக்காட்டினார். அது நிதியுதவியின் 28% எனவும், 2022 மே 18 ஆம் திகதி வரை 92.2 மில்லியன் அமெரிக்க டொலருக்கு அதிகமான விலைப்பட்டியல் மாத்திரம் பரிந்துரை செய்யப்பட்டிருந்தமை குழுவின் தலைவரால் இதன் போது சுட்டிக்காட்டப்பட்டது.

இந்திய கடனுதவிக்கு மேலதிகமாக, மருந்துப் பொருட்கள் பெற்றுக்கொள்வதற்குக் கிடைத்துள்ள உலக வங்கிக் கடன் (WB), உலக சுகாதார ஸ்தாபனத்தின் உதவி (WHO), ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவி (ADB) மற்றும் ஏனைய நன்கொடையாளர்களிடமிருந்து கிடைத்துள்ள உதவிகளை விரைவாகப் பயன்படுத்தாமை தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

## சிஸ்டத்தை 21 ஆல்...

21ஆவது திருத்தச் சட்டமூலம் தொடர்பில் ராமஞ்ஞ மாநாயக்க தேரருக்கு விளக்கமளித்தப் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.இதன்போது தொடர்ந்து உரையாற்றிய அவர், கடந்த நவம்பர் மாதத்திலிருந்து நாட்டின் பொருளாதாரத்தை இவ்வருடம் ஏப்ரலுக்குப் பின்னர் முன்கொண்டு செல்ல முடியாதென நான் தொடர்ந்து கூறிவந்தேன். மத்திய வங்கியின் ஆளுநராக அஜித் நிவாட் கப்ரால், ஜனாதிபதியின் செயலாளராக பி.பி.ஜயசுந்தர ஆகியோரை நியமிக்கும்போதே நாட்டின் பொருளாதாரம் சரிவை சந்திக்குமென உறுதியாக தெரிந்தது எனவும் தெரிவித்தார்.

இரட்டைக் குடியுரிமை அழுத்தத்தால் அமைக்கப்பட்ட அமைச்சரவையும் நீண்ட காலத்துக்கு செல்லாதென நான் தெரிந்துக்கொண்டேன். இதனாலேயே நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு சர்வ கட்சி கொண்ட அரசாங்கம் ஒன்றை அமைக்க வேண்டுமென கூறிவந்தேன். எனினும் அப்போது அரசாங்கத்துக்கு எதிராக எவரும் வீதிக்கு இறங்கி போராடவில்லை. தற்போது போராடும் இளைஞர்கள், எங்களால் செய்ய முடியாதப் பலவற்றை சாதித்துக் காட்டினார். பலவற்றில் அவர்கள் வெற்றியும் கண்டார்கள் எனவும் கூறினார்.

# நெருக்கடி அமைச்சரவையை உடனடியாக அமையுங்கள்



நாட்டின் நெருக்கடி நிலைமைகளை கையாளவும், சர்வதேசத்தை இணங்க வைக்கவும் உடனடியாக நெருக்கடி கால அமைச்சரவையை உருவாக்க ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், சகல கட்சிகளையும் ஒன்றிணைத்த சர்வகட்சி அரசாங்கத்தை அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

நாட்டில் பாரிய அரசியல் பிரச்சினை உள்ளது என்பதை இப்போதாவது நாம் அனைவரும் விளங்கிக்கொள்ளவில்லை என்றால், முறையான அரசியல் மாற்றமொன்று அவசியம் என்பதை உணரவில்லை என்றால் நாடாக மீள முடியாது. ஐம்பது ஆண்டுகளில் ஆசியாவில் வங்குரோத்து நிலைக்கு தள்ளப்பட்ட ஒரே நாடு இலங்கை என்பதை விளங்கிக்கொள்ள வேண்டும். ஆகவே சகல கட்சிகளும் ஒன்றிணைந்து, குறுகியகால அமைச்சரவை ஒன்றினை உருவாக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

நெருக்கடியைத் தீர்க்கும் அமைச்சரவையில் சகல கட்சிகளின் உறுப்பினர்களையும் இணைத்துக்கொள்ள வேண்டும். அவ்வாறு சர்வகட்சி அரசாங்கத்தை உருவாக்கிக்கொண்டால் மட்டுமே சர்வதேசத்தை எதிர்கொள்ள முடியும். சர்வதேசத்தின் நம்பிக்கையை பெற்றுக்கொள்ளவும் முடியும். அதுமட்டுமல்ல, நாட்டில் பாரிய அளவிலான மீள் கட்டமைப்பு வேலைத்திட்டங்களை முன்னெடுத்தாக வேண்டும், இதில் சகல தரப்பினரதும் இணக்கப்பாடு வேண்டும். சகல இன மக்களின் பிரதிநிதிகளும் இதில் ஒன்றிணைய வேண்டும். 21ஆம் திருத்தம் கொண்டுவந்து நாட்டை மீட்டெடுக்க முடியாது. அதேபோல் தனி நபர்களால் நாட்டை மீட்டெடுக்க முடியாது. தனி நபர்களை நம்பி சர்வதேசம் கடன்களை வழங்காது எனவும் தெரிவித்துள்ளார்.

## அரச அடக்குமுறைக்கு எதிராக இணைந்து போராட இணக்கம்

அரச அடக்குமுறைக்கு எதிராக ஒன்றிணைந்து போராடவும், எதிர்கால அரசியல் செயற்பாடுகளில் அவசியமான நேரங்களில் ஒன்றிணைந்து செயற்படவும் தேசிய மக்கள் சக்தியும் முன்னிலை சோஷலிச கட்சியும் பொது இணக்கப்பாட்டிற்கு வந்துள்ளதாக தெரிவித்தன.

முன்னிலை சோஷலிசக் கட்சியின் அரசியல் குழு உறுப்பினர் புபுது ஜெயக்கொடி உள்ளிட்ட கட்சியின் உறுப்பினர்கள், தேசிய மக்கள் சக்தியின் அரசியல் குழு உறுப்பினர்களுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டிருந்தனர். குறிப்பாக, மக்கள் போராட்டத்தை அடிப்படையாக கொண்டு இடதுசாரி கட்சிகள் முடக்கப்படுவதாக ஜே.வி.பி உள்ளிட்ட கட்சிகள் தொடர்ச்சியாக குற்றம் சுமத்தி வருகின்ற நிலையில் அது குறித்தும், நாட்டின் தற்போதைய மக்கள் எழுச்சிப் போராட்டங்கள் குறித்தும், நிறைவேற்று ஜனாதிபதி முறைமை நீக்கப்படுவது உள்ளிட்ட அடுத்தகட்ட அரசியல் நகர்வுகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டுள்ளன.

அதேபோல், பொதுவான வேலைத்திட்டங்களை ஒன்றிணைந்து முன்னெடுப்பது குறித்தும், பொதுமக்களின் போராட்டங்களில் ஒத்துழைப்புகளை வழங்கி செயற்படுவது குறித்தும் கலந்துரையாடப்பட்டதுடன், இரண்டு தரப்புக்கும் இடையிலான புரிந்துணர்வு மூலமாக, எதிர்காலத்தில் அரசியல் செயற்பாடுகளில் அதனை முன்னெடுத்துச் செல்ல வாய்ப்பாக அமையலாம் எனவும் தேசிய மக்கள் சக்தியின் அரசியல் குழு உறுப்பினர் லால் காந்த தெரிவித்துள்ளார்.



### பதவியேற்பு

புதிய இராணுவத் தளபதியாக நியமிக்கப்பட்டுள்ள லெப்டினன் ஜெனரல் விக்கும் லியனகே இராணுவ தலைமையகத்தில் கடமைகளை பொறுப்புபெற்றுக்கொண்டார்.

## “எதிர்க்கட்சியில் அமர்வேன்” ஆளுங்கட்சி எம்.பி ஜனாதிபதிக்கு எச்சரிக்கை

■ பா.நிரோஸ்




பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டு மக்களை மீட்பதற்கான அவதானத்தை செலுத்தி, எங்களது அரசாங்கம், ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்டோர் செயற்படவில்லை என்றால், ஆளுங்கட்சியிலிருந்து விலகி எதிர்க்கட்சி ஆசனத்தில் அமரப்போவதாக ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் ஜகத் குமார அதிரடியாக அறிவித்தார்.

பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டு மக்களை மீட்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென ஜனாதிபதி, பிரதமருக்கு நேரடியாகவே கூறிவிட்டோம். ஆனாலும் இதற்கு முன்னரும் நாம் கூறிய பல விடயங்களை அரசாங்கம் கேட்கவில்லை. குறிப்பாக, மக்கள் பிரதிநிதிகள் வீதிகளில் அடித்துக் கொலை செய்யப்படும் நிலை வரும் எனவும், எரிபொருளுக்கு வரிசைகள் ஏற்படும் எனவும் நாம் முன்பே கூறினோம். ஆனால், எங்கள் பேச்சை அரசாங்கம் கேட்கவில்லை. எங்களது பேச்சைக் கேட்கவில்லை என்பதாலேயே அரசாங்கத்துக்கு இந்தப் பாரதூரமான நிலை ஏற்பட்டுள்ளது. இப்போதாவது நாட்டின் நெருக்கடி நிலைமைகள் தொடர்பில் அவதானத்தைச் செலுத்தி, ஜனாதிபதியும் பிரதமரும் செயற்படவில்லை என்றால், எதிர்க்கட்சியில் அமர்ந்து எதிர்க்கட்சியாக செயற்படுவோம். நாட்டு மக்களை பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்க வேண்டுமென்பதற்காகவே நாம் தற்போது எந்தவிதமானப் பதவிகளையும் பெறாது, அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்கி வருகிறோம் எனவும் தெரிவித்தார்.

## பெற்றோலிய விநியோகத்துக்கு 70 முன்மொழிவுகள் வந்துள்ளன

### பொய்யான தகவல்களை பரப்ப வேண்டாம் என்கிறார் காஞ்சன

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் எரிசக்தி அமைச்சுக்கு கடந்த ஒரு மாத காலப்பகுதியில் பெற்றோலிய பொருட்களின் விநியோகம் தொடர்பாக 70க்கும் மேற்பட்ட முன்மொழிவுகள் கிடைத்துள்ளதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.
நேற்று (01) வெளியிட்ட டுவிட்டர் பதிவொன்றிலேயே அமைச்சர் மேற்குறிப்பிட்ட விடயத்தைத் தெரிவித்தார்.
அனைத்து முன்மொழிவுகளும் அரச அதிகாரிகளைக் கொண்ட குழுவால் மதிப்பீடு செய்யப்பட்டு, அனைத்துத் தேவைகளும் பூர்த்தி செய்யப்பட்டவுடன் கடிதங்கள் வழங்கப்படும்.
பெரும்பாலான முன்மொழிவுகள் தொழில்நுட்பத் தேவைகளைப் பூர்த்தி செய்தாலும், நாடு மற்றும் வங்கிகளின் மதிப்பீடுகள் காரணமாக, கூட்டுத்தாபனத்தால் பின்பற்றப்படும் கட்டண முறைகளை நிறைவேற்றத் தவறிவிட்டது.
சாத்தியமான முன்மொழிவைக் கொண்ட நபர்களை கூட்டுத்தாபனம் அல்லது எரிசக்தி அமைச்சை அணுகுமாறும், போலியான செய்திகளைப் பரப்புவதைத் தவிர்க்குமாறும் அமைச்சர் வலியுறுத்தினார்.
ரஷ்யாவில் இருந்து இலங்கைக்கு கச்சா எண்ணெய் விநியோகிக்கப்படுவதாக வெளியான செய்திக் கட்டுரைகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தமது சட்டத்தரணிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.
குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திடம் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் இது குறித்து முறைப்பாடு பதிவு செய்யப்படவுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.



### தெற்காசியாவில் முதல் முறையாக ‘மெட்டாவர்ஸ்’ மூலம்

## Google I/O Extended Sri Lanka 2022 நிகழ்வை வழங்கியது டயலொக்

இலங்கையின் முன்னணி தொலைத்தொடர்பு வழங்குனரான டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி நிறுவனம், *Ideamart, Innovation Foundry* மற்றும் இலங்கையின் *Google Developer Group* ஆகியவற்றுடன் இணைந்து தெற்காசியாவில் முதல் தடவையாக மெட்டாவர்ஸ் (*metaverse*) ஊடாக ‘*Google I/O Extended Sri Lanka 2022*’ எனும் நிகழ்வினை மே மாதம் 28 ஆம் திகதியன்று நடத்தியது. இது மே மாதம் 11 ஆம் திகதி முடிவடைந்த சர்வதேச ‘*Google I/O 2022*’ செயற்திட்டத்துடன் தொடர்புடைய சமகால நிகழ்வாக இது நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

200,000 பார்வையாளர்களை ஈர்த்திருந்த, மேற்படி தனித்துவமான *Google I/O Extended Sri Lanka 2022* நிகழ்ச்சியானது, நாடு முழுவதும் உள்ள அனைத்து தொழில்நுட்ப ஆர்வலர்களுக்கும் புதுமையான அறிவு பகிர்வு மற்றும் தொழில்நுட்ப பகிர்வு ஆகிய அனுபவங்களை வழங்கக்கூடியதாக அமைந்திருந்தது. இதில் பங்கு கொண்டவர்கள் தமது கையடக்க தொலைபேசிகள், மடிக்கணினிகள் மற்றும் டெப்லெட்கள் மூலம் தமது வீடுகளில் இருந்தவாறே சௌகரியமாக இந்த ‘*Google I/O Extended Sri Lanka 2022*’ இல் இணைந்து கொள்ளக்கூடியதாக இருந்ததுடன், டயலொக் டெலிவிஷன் செனல்1 (*Dialog Television Channel 1*), டயலொக் உத்தியோகபூர்வ *Facebook* பக்கம் மற்றும் யூடியூப் (*YouTube* ) செனலின் ஊடாக இதனை லைவ் ஸ்ட்ரீமிங் (*LIVE Streaming*) அனுபவமாக பெறும் வாய்ப்பையும் அவர்களுக்கு வழங்கியது.

தெற்காசிய பிராந்தியத்தில் முதன் முறையாக நடாத்தப்பட்ட இந்த ‘மெட்டாவர்ஸ்’ (*Metaverse*) நிகழ்வை, இலங்கையில் சமூக ஊடகங்களில் மிகவும் பிரபலமான தொழில்நுட்ப பிரமுகர் சானுக்ஸ் ப்ரோ மற்றும் அஜ்மால் ஹுசைன் ஆகியோர் தொகுத்து வழங்கிய அதேவேளை, சமீபத்திய புதிய கண்டுபிடிப்புகள், இனிவரும் நாட்களில் வர்த்தக சந்தையில் அறிமுகப்படுத்துவதற்கு தயார்படுத்தப்படுகின்ற புதிய உற்பத்திகள் பற்றிய அறிமுகங்களும் செய்யப்பட்டது. உலகம் பூராவும் உள்ள மென்பொருள் விருத்தியாளர்களுடன் இணைந்து (Software Developers) தொழில்நுட்பம் தொடர்பான கலந்துரையாடல் நிகழ்வொன்றும் நடாத்தப்பட்டது. *Google* நிறுவனத்தின் நிபுணர்களுடன் நடைமுறை ரீதியிலான புதிய ஆய்வுகள் குறித்து அறிந்து கொள்வதற்கான வாய்ப்பும் பங்குபற்றுனர்களுக்கு வழங்கப்பட்டது. மேலும், இதன்போது டயலொக் நிறுவனத்தினால் அதன் 5G க்கான உயர் தொழில்நுட்ப தீர்வுகள் காட்சிப்படுத்தப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. அதற்கமைய , Digital




Twin, Robot Arm, 360 Video மற்றும் *Hologram* உட்பட இன்னும் பலதும் இவ்வாறு ‘5G இன்னோவேஷன் சென்டர்’ களினூடே காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. மேலும், டயலொக்கின் *Intelligent Video Content Analysis (IVCA)* எனப்படும் நுண்ணறிவு வீடியோ உள்ளடக்க பகுப்பாய்வு சேவைகள் உட்பட பல புதுமைகளையும் பார்வையாளர்கள் இதன்போது காணும் வாய்ப்பையும் பெற்றனர். இவைமட்டுமன்றி, 777 *NFT*கள், ஸ்மார்ட் சாதனங்கள், *Star Points* மற்றும் *Google I/O Extended Sri Lanka 2022* ஐ அடையாளப்படுத்தும் குறிப்பிட்டளவு எண்ணிக்கையிலான டி-ஷர்ட்கள் ஆகியனவற்றை வெற்றி கொள்ளும் வாய்ப்பும் பங்கேற்பாளர்களுக்கு கிட்டியது.

இந்நிகழ்வு குறித்து டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி இன் குழும பிரதம நிறைவேற்று அதிகாரி சுபுன் வீரசிங்ஹ கருத்து தெரிவிக்கையில், “புதுமைகளின் செம்பியன் என்ற வகையில், மே 28 ஆம் திகதி மெட்டாவர்ஸ் (Metawares) ஊடாக எமது உள்ளூர் பார்வையாளர்களுக்கு தனித்துவமான அனுபவத்தை வழங்க கிடைத்தமையையிட்டு நாங்கள் மகிழ்ச்சியடைகின்றோம். இலங்கையில் உள்ள மிகவும் சக்திவாய்ந்த டிஜிட்டல் தொழில்நுட்ப நடத்துனர்கள் என்ற ரீதியிலும், இலங்கையில் ஐந்தாவது தடவையாகவும் *Google I/O Extended Sri Lanka 2022* நிகழ்வை ஒருங்கமைத்த நிறுவனம் என்ற ரீதியிலும் இந்த திட்டத்தின் மூலம் நமது உள்ளூர் தொழில்நுட்ப அறிவுக்கும் உலகளாவிய அனுபவத்திற்கும் இடையிலான இடைவெளியைக் குறைப்பதே எங்கள் நோக்கமாகும். அதற்கமைய, இதில் பங்கேற்கும் தொழில்நுட்ப தொழில்முனைவோர் மற்றும் வடிவமைப்பாளர்கள் ஆகியோருக்கு புதிய தொழில்நுட்பம் மற்றும் அதனூடே உருவாகும் கண்டுபிடிப்புகள் குறித்து அறிந்து கொள்ளச் செய்வதற்கும், அவ்வாறே ஏனைய தொழில்நுட்ப தொழில்முனைவோர் மற்றும் மென்பொருள் உருவாக்குனர்களுடனான உறவுகளை வளர்த்துக் கொள்ளச் செய்வதற்கும் சிறந்த வாய்ப்பினை எங்களால் வழங்க முடிந்துள்ளமையையிட்டு நாங்கள் மகிழ்ச்சி கொள்கின்றோம்” என்றார்.

**நிறுவனத்தின் பெயர் மாற்றம் குறித்த பொது அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகளின் சட்டத்தின் பிரிவு 9 (2) கீழ் கீழ்க்கானும் கம்பனி கீழே விபரிக்கப்பட்டுள்ளவாறு 2022 மார்ச் மாதம் 08 ஆம் திகதியில் இருந்து பெயர் மாற்றம் செய்யப்பட்டு நடைமுறைக்கு வருகிறது என இத்தால் வழங்கபடுகின்ற அறிவித்தல்.

**கம்பனியின் பழைய பெயர் :** குளோபல் மார்கட் டெக்னொலொஜீஸ் (பிரைவட்) லிமிட்டட்

**கம்பனியின் புதிய பெயர் :** ஜீஎன் டெக்னொலொஜீஸ் (பிரைவட்) லிமிட்டட்

**கம்பனியின் இலக்கம் :** P - V 64995

**பதிவு செய்யப்பட்ட அலுவலக முகவரி :** இல. 19, 6 வது மாடி, எவ்எல்சி கட்டடம், டட்லி சேனாநாயக மாவத்தை, கொழும்பு 08.

**கம்பனி செயலாளர்கள்**
**கோர்ப்பரேட் எட்வைசரி சேர்விசஸ் (பீவீடீ) எல்டீடி**

**பொது அறிவித்தல்**

| | |
|---|---|
| யஸ்மின் மெனொர் (பீவீடீ) எல்டீடி<br>இல. 162/19/A, கடுவெல வீதி, மாலபே. | பீ - வி 00256254 |
| ஓட்சு டிரேடிங் (பீவீடீ) எல்டீடி<br>இல. 12, 3 வது ஒழுங்கை, மயான வீதி, கண்டி. | பீ - வி 00221667 |
| அகிட்டா டிரேடிங் (பீவீடீ) எல்டீடி<br>இல. 532, நீரெல்ல, அகுரன. | பீ - வி 00254844 |
| லங்கா ஒத்தென்டிக் எக்ஸ்பீரியன்ஸ் (பீவீடீ) எல்டீடி<br>இல. 13/130, எம் டி மய்யாவ, கண்டி. | பீ - வி 00209833 |
| எம்கோர்ப் (பீவீடீ) எல்டீடி<br>இல. 792/3, பன்னிபிடிய வீதி, தளவதுகொட. | பீ - வி 00258141 |
| ஆர்என்ஜே இனோவேஷன்ஸ் (பீவீடீ) எல்டீடி<br>இல. 240/1 A, கொஸ்வத்த, தலங்கம வடக்கு, பத்தரமுல்லை. | பீ - வி 00257980 |
| இன்/பினிட்டி ஆர்ட் அட்வெர்டைசிங் (பீவீடீ) எல்டீடி<br>இல. 297/1, முதுகடுவ, மாரவில.<br>**கம்பனியின் புதிய பெயர்:**<br>பிர்ஸ்டட் அடவெர்டைசிங் (பீவீடீ) எல்டீடி | பீ - வி 00242397 |
| நெம்டா டொடி (பிரைவட்) லிமிட்டட்<br>இல. 11, போவத்த, முதுகடுவ, மாரவில.<br>**கம்பனியின் புதிய பெயர்:**<br>நெம்டா (பீவீடீ) எல்டீடி | பீ - வி 106149 |
| ட்ரைய்கோ இன்டர்நெஷனல் காகோ (பிரைவட்) லிமிட்டட்<br>இல. 500/18, ஏவ் மரியா மாவத்தை, மினுவன்கொட வீதி, நீர்கொழும்பு.<br>**கம்பனியின் புதிய பெயர்:**<br>வேர்ல்ட்வைட் ட்ரிகோ கார்கோ (பிரைவட்) லிமிட்டட் | பீ - வி 117895 |

**பணிப்பாளர்கள்**

# தீர்வை பெற்றுத்தருவார்

■ எம்.எம்.அஹமட் அனாம்



நாட்டின் சமூக பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வைத் தேடும் ஜனாதிபதியின் முயற்சியில், முத்தாரமாக நியமனம் பெற்ற பிரதமர் ரணில் விக்ரமசிங்க, மிகக்குறுகிய காலத்தில் குறித்த பிரச்சினைகளுக்கு தீர்வைப் பெற்றுத் தருவார் எனும் நம்பிக்கை தற்போது தோன்றியுள்ளது என ஸ்ரீ லங்கா ஐக்கிய முன்னணியின் பொதுச் செயலாளர் எம்.ஐ.சல்மான் வஹாப் தெரிவித்தார்.

தற்கால அரசியல் நிலைமைகள் தொடர்பில் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; இலங்கை அரசியலில் ஒரு முதுசமாக இருக்கும் தற்போதைய பிரதமர், சர்வதேச உறவிலும் நிலையான ஒரு தடத்தை ஏற்படுத்திக் கொண்டவர். குறிப்பாக, பிரதமராக ரணில் விக்கிரமசிங்க நியமனம் பெற்றவுடன் அவரால் முன்னெடுக்கப்பட்ட பொருளாதார சிக்கனத் திட்டங்கள் அனைவரையும் சிந்திக்க வைத்துள்ளன.

இச்சூழ்நிலையில், பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அனைத்து உறுப்பினர்களும் கட்சிகளும் சுயநலப்போக்கைக் கைவிட்டு, மக்கள் நலனுக்காக பிரதமரின் செயற்பாடுகளுக்கு ஆதரவை வழங்க வேண்டும்.

அவசரம் கொள்ளாது அவரின் சிந்தனை, செயற்பாடுகளுக்கு குறுகியகால அவகாசமேனும் வழங்கி பொறுமை காக்க வேண்டும். இவற்றின் அடிப்படையில் தான் சர்வதேச சமூகமும் இலங்கை மீது ஒரு பார்வையை செலுத்திக் கொண்டிருக்கின்றன.

இதனைத்தொடர்ந்து, ஜனாதிபதியும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் இணைந்த புதிய பயணம், அழகிய விடியலொன்றை இலங்கைக்கு ஏற்படுத்தும் என நம்பிக்கை தெரிவித்தார்.

# கடமைகள் பொறுப்பேற்பு

■ எப்.முபாரக்

திருகோணமலை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபராக (காணி)நியமிக்கப்பட்ட எஸ். சுதாகரன், தம் கடமைகளை மாவட்ட செயலகத்தில் நேற்று (01) பொறுப்பேற்றுக்கொண்டார்.

2007ஆம் ஆண்டு நடத்தப்பட்ட இலங்கை நிர்வாகசேவை திறந்த போட்டிப் பரீட்சை மூலம், இலங்கை நிர்வாக சேவைக்கு இவர் இணைக்கப்பட்டார்.

இலங்கை நிர்வாக சேவை முதலாம் தர அதிகாரியான இவர், இதற்கு முன்னர் வன்னி, யாழ்ப்பாணம்,மட்டக்களப்பு மாவட்டங்களின் உதவித் தேர்தல்கள் ஆணையாளர், திருகோணமலை மாவட்ட உதவி உள்ளூராட்சி ஆணையாளர், கிழக்கு மாகாண பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் ஆகிய பதவிகளையும் வகித்துள்ளார்.

கடமைகளை பொறுப்பேற்கும் நிகழ்வில், மாவட்ட அரசாங்க அதிபர் பி.எச்.என். ஜயவிகரம, மேலதிக அரசாங்க அதிபர் ஜே.எஸ். அருள்ராஜ் உட்பட மாவட்ட செயலக பதவிநிலை உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.



# ஹேறொயின் வைத்திருந்தவர் கைது

■ எப்.முபாரக்

திருகோணமலை தலைமையக பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கேணியடி, திருக்கடலூர் பகுதியில் 6 கிராம் ஹேரொயின் போதைப்பொருளை வைத்திருந்த 29 வயதுடைய ஒருவரை, இம்மாதம் 6 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு திருகோணமலை நீதிமன்ற நீதிவான் இன்று(1) உத்தரவிட்டார்.

சந்தேக நபர் திருகோணமலை பகுதியில் ஹேறொயின் போதைப்பொருள் விற்பனை செய்து வருவதாக திருகோணமலை போதைப்பொருள் குற்றத்தடுப்பு பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில், சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்ட போதே, 6 கிராம் ஹேறொயின் போதைப் பொருளுடன் கைது செய்ததாக திருகோணமலை தலைமையக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சிறுமி துஷ்பிரயோகம்:

# சிறுவர்களுக்கு விளக்கமறியல்

■ கனகராசா சரவணன்

அம்பாறை, அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவிலுள்ள அட்டாளைச்சேனை பிரதேசத்தில் 11 வயது சிறுமியை துஷ்பிரயோகம் செய்தனர் என்ற குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்ட 16 வயதான சிறுவர்கள் இருவரையும் 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு அக்கரைப்பற்று நீதிமன்ற நீதவான் நேற்று முன்தினம் (31) உத்தரவிட்டார்.

குடும்பத்துடன் அச்சிறுமி, கடந்த 23 ஆம் திகதி கடற்கரைக்குச் சென்றுள்ளார். அவ்வாறு சென்று கொண்டிருந்த போது, சிறுமியின் மூத்த சகோதரி வீட்டுக்குச் செல்லவேண்டியதாயிற்று. ஏனைய உறவினர்கள் கடற்கரையில் வீற்றிருக்க, விளையாடிக் கொண்டிருந்த 11 வயதான சிறுமியை, சகோதரியின் பாதுகாப்புக்காக வீட்டுக்கு உறவினர்கள் அனுப்பியுள்ளனர்.

வீட்டுக்குச் சென்ற சிறுமி, இரவு 10.30 மணியளவில், தனிமையாக மீண்டும் கடற்கரைக்கு திரும்பிக் கொண்டிருந்தார். அப்போது, வீதியோரத்தில் நின்றிருந்த சிறுவர்கள் இருவர், அவரின் வாயை கையால் பொத்தி, அருகிலுள்ள வீட்டுக்குச் தூக்கிச்சென்றுள்ளனர்.

அதிலொருவர், வீட்டுக்கு வெளியில் காவலிருக்க, மற்றையவர் அந்த சிறுமியை துஷ்பிரயோகம் செய்துள்ளார். இதுதொடர்பில், தன்னுடைய பெற்றோரிடம் அச்சிறுமி தெரிவித்துள்ளார். பொலிஸில் அவர்கள் செய்த முறைப்பாட்டுக்கு அமைய, கைது செய்யப்பட்ட சிறுவர்கள் இருவரும் நீதிமன்றத்தின் ஊடாக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.



# நாட்கூலி தொழிலாளர்களுக்கு கடுமையான பாதிப்பு

■ எம்.எஸ்.எம். ஹனீபா

நாட்டில் தொடர்ச்சியாக ஏற்பட்டுள்ள சமையல் எரிவாயு தட்டுப்பாடு காரணமாக, அம்பாறை மாவட்டத்திலுள்ள அதிகமான உணவகங்கள், சிற்றுண்டி வியாபார நிலையங்கள் என்பவை நீண்ட நாள்களாக மூடிய நிலையில் காணப்படுவதால், அந்த உணகங்களின் நாட்கூலி தொழிலாளர்கள் பொருளாதார ரீதியாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பலர் தொழிலை இழந்துள்ளதால், அவர்களின் குடும்பங்கள் வறுமை நிலைக்கு தள்ளப்பட்டு உள்ளனர்.

எரிபொருள், எரிவாயு தட்டுப்பாடு காரணமாக, உணவுப் பொருட்களுக்கு என்றும் இல்லாதவாறு விலை அதிகரித்துக் காணப்படுவதால் நாளாந்த உணவுக்குக் கூட கஷ்டப்படுகிறார்கள்.




சமையல் எரிவாயு தட்டுப்பாடு காரணமாக நடமாடும் சிற்றூண்டி வியாபாரத்தில் ஈடுபடு பவர்களும் தமது தொழிலை இழந்துள்ளனர். எனவே, வருமானத்தை இழந்த, வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களுக்கு அரசாங்கத்தால் 05 ஆயிரம் ரூபாய் மானியக் கொடுப்பனவு வழங்கப்பட்டு வரும் நிலையில், சிற்றுண்டி, உணவகங்களில் பணி புரிந்து தொழிலை இழந்தவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் மானியக் கொடுப்பனவை வழங்குவதற்கும் முன்வர வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டுள்ளனர்.

# கடையை உடைத்து உரப்பைகள் கொள்ளை

■ கனகராசா சரவணன்

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவிலுள்ள அட்டாளைச்சேனை-ஆலங்குளம் வீதியிலுள்ள கடையொன்றின் கதவை உடைத்து, அங்கு களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டிருந்த சுமார் இரண்டரை இலட்சம் ரூபாய் பெறுமதியான உரப் பைகளை கொள்ளையடித்துச் சென்ற சம்பவம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (31) இரவு இடம்பெற்றுள்ளதாக அக்கரைப்பற்று பொலிஸார் தெரிவித்தனர்.

கடையின் முதலாளி நெல் அறுவடையின் வியாபாரத்துக்காக உரப் பையை களஞ்சியப்படுத்தி வைத்திருந்துள்ளார்.



கடைக் கதவின் பூட்டை இரும்பு வாளால் அறுத்து, கதவை உடைத்து அங்கு களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டிருந்த உரப் பைகளை கொள்ளையர்கள் கொள்ளையிட்டு சென்றுள்ளதாக தெரிவித்த பொலிஸார், மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றது என்றனர்.

# இலங்கையர் மூவர் தமிழகத்தில் தஞ்சம்

■ எம்.றொசாந்த் , றொசேரியன் லெம்பர்ட்

கொழும்பைச் சேர்ந்த தாய், மகன் உள்ளிட்ட மூவர், படகு மூலம் தமிழகத்திற்கு சென்று அகதி தஞ்சம் கோரியுள்ளனர்.

கொழும்பைச் சேர்ந்த ஜெசிந்தா மேரி, அவரது 10 வயதுடைய மகன், மன்னார், சிலாவத்துறையை சேர்ந்த அனிஸ்டன் உள்ளிட்ட மூவரே தஞ்சமடைந்துள்ளனர்.

குறித்த மூவரும் மன்னர், பேசாலை கடற்கரையில் இருந்து நேற்று முன்தினம் (31) இரவு, படகொன்றில் புறப்பட்டு, நேற்று (01) அதிகாலை தனுஷ்கோடிக்கு அருகிலுள்ள கோதண்டராமர் கடற்கரை பகுதியை சென்றடைந்துள்ளனர்.

இது குறித்து தகவல் அறிந்த மண்டபம் கடலோர காவல் படையினர், மூவரையும் மீட்டு



விசாரணைகளை முன்னெடுத்தனர்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியை காரணம் காட்டி, கடந்த மார்ச் மாதம் 22ஆம் திகதி முதல் ஜூன் மாதம் 1ஆம் திகதி வரையில் 83 பேர் கடல் மார்க்கமாக தமிழகம் சென்றுள்ளனர்.

# ஐயாத்துரை நடேசனின் நினைவேந்தல் நிகழ்வு

■ விஜயரத்தினம் சரவணன்

2004ஆம் ஆண்டு மட்டக்களப்பில் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட, ஊடகவியலாளரும் நாட்டுப்பற்றாளருமான ஐயாத்துரை நடேசனுடைய 18ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்று (01) நடைபெற்றது.

முல்லைத்தீவு ஊடக அமையத்தில், முல்லைத்தீவு ஊடக அமையத் தலைவர் சண்முகம் தவசீலனின் தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றது.

ஊடகவியலாளரும், நாட்டுப்பற்றாளருமான ஐயாத்துரை நடேசனின் திருவுருவப்படத்துக்கு நினைவுச் சுடரேற்றி, மலர் வணக்கம், அகவணக்கம்




செலுத்தப்பட்டு, உணர்வுபூர்வமாக இந்த அஞ்சலி நிகழ்வு நடைபெற்றிருந்தது.

இந்த அஞ்சலி நிகழ்வில் முல்லைத்தீவு ஊடக அமையத்தைச் சார்ந்த ஊடகவியலாளர்கள், சிவில் சமூக, அரசியல் செயற்பாட்டாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.




உலக புகையிலை எதிர்ப்பு தினம்

# விழிப்புணர்வு நடைபவணி

■ றொசேரியன் லெம்பர்ட்

உலக புகையிலை எதிர்ப்பு தினமான நேற்று முன்தினம் (31) முசலி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் விழிப்புணர்வு நடைபவணி நடைபெற்றது.

முசலி சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் எம். ஒஸ்மன் சாள்ஸ் தலைமையில் நடைபெற்ற விழிப்புணர்வு நடை பவனியில், மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி.வினோதன், சிலாவத்துறை வைத்தியசாலை வைத்தியர் உட்பட்ட ஊழியர்கள், பிரதேச சபை,பிரதேச செயலக ஊழியர்கள், ஓட்டோ சங்க உறுப்பினர்கள், சிலாவத்துறை மதரஸா மாணவர்கள், பிராந்திய தொற்றா நோய் வைத்திய அதிகாரிகள், முசலி வைத்திய அதிகாரி அலுவலக பொது சுகாதார பரிசோதகர்கள், குடும்ப நல உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் அலுவலர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இளைஞர்கள் இருவர் திடீரென மரணம்;

# போதையில் இருந்தமை கண்டறியப்பட்டது

■ றொசேரியன் லெம்பர்ட்

மன்னாரில் கடந்த 30ஆம் திகதி இரவு காரொன்றுக்குள் மர்மமான முறையில் உயிரிழந்த இளம் குடும்பஸ்தர்கள் இருவரும் மதுபானம் மற்றும் போதைப்பொருள் பயன்படுத்தியதால் ஏற்பட்ட ஒவ்வாமை காரணமாகவே உயிரிழந்துள்ளனர் என மன்னார் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மன்னாரிலிருந்து கொழும்பு நோக்கி பயணித்த நிலையில் மரணித்த இரண்டு இளம் குடும்பஸ்தர்களின் பிரேத பரிசோதனை யாழ். வைத்தியசாலையில் இடம் பெற்றுள்ளது.

கொழும்பு நோக்கி பயணித்துக் கொண்டிருந்த போது மன்னார், உயிலங்குளம் பகுதியில் ஒரே நேரத்தில் இருவர் திடீரென சுகவீனமடைந்துள்ளனர். இருவரும் அதே வாகனத்தில்



மன்னார் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர்கள் பேசாலையைச் சேர்ந்த எம்.பிரதீப் (வயது 26), காட்டாஸ்பத்திரியை சேர்ந்த எம்.மசூர் (வயது35) என பொலிஸார் தெரிவித்தனர்.

பிரேத பரிசோதனைகள் நிறைவடைந்த நிலையில், சடலங்கள் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. சம்பவம் தொடர்பில், மன்னார் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# நாட்டுக்கூத்து

வற்றாப்பளை கண்ணகி அம்மன் கோவில் வைகாசி விசாக பொங்கலை முன்னிட்டு, ஆண்டு தோறும் நடத்திவரும் நேர்த்திக்கூத்தும், பாரம்பரிய கூத்துமான கோவலன் கண்ணகி வரலாற்றினை சொல்லும் நாட்டுக்கூத்து, இந்த ஆண்டும் இன்று (02) இரவு 7 மணிக்கு முள்ளிவளை, காட்டுவிநாயகர் கோவில் முன்றலில் நடைபெற உள்ளதாக காட்டுவிநாயகர் நாடக மன்றத்தினர் அறிவித்துள்ளார்கள்.

முதுபெரும் அண்ணாவியாரும் கலாபூசணம் ஆறுமுகம் பாலசுந்தரத்தின் நெறியாள்கையில் உதவி அண்ணாவியார் க. இந்துசன் இணைந்து புதிதாக தயாரிக்கப்பட்டு, அ.மயூரனின் உடை அலங்காரத்திலும், நிலவன் ஒளி, ஒலி அமைப்பிலும் வட்டக்கலரியில் கோவலன் கண்ணகி நாட்டுக்கூத்து அரங்கேறவுள்ளது.

யாழ்.பொது நூலகம் எரிக்கப்பட்டு

# 41 ஆண்டுகள் நிறைவு

■ என்.ராஜ்

யாழ். பொது நூலகம் எரியூட்டப்பட்டதன் 41 ஆவது வருட நினைவுகூரல் நிகழ்வு நேற்று (01) நடைபெற்றுள்ளது.

யாழ். மாநகர சபையின் ஆளுகைக்கு உட்பட்ட யாழ். பொதுசன நூலகம், 1981 ஆம் ஆண்டு எரியூட்டப்பட்டு சிதைவடைந்த நிலையில், அது மறுசீரமைக்கப்பட்டு மீண்டும் புத்துயிர் பெற்று வரும் நிலையில், இன்றைய தினம் நூலகம் எரியூட்டப்பட்டதன் 41ஆவது நினைவு தினம் யாழ். பொது நூலகத்தில் நடைபெற்றது.

யாழ்ப்பாண மாநகர சபையின் ஏற்பாட்டில் நடைபெற்ற குறித்த நினைவேந்தல் நிகழ்வில், யாழ்ப்பாண மாநகர மேயர்,



யாழ்ப்பாண மாநகர சபையின் ஆணையாளர், யாழ்ப்பாண மாநகர சபையின் பிரதி மேயர், யாழ் மாநகர சபையின் உறுப்பினர்கள், நூலக உத்தியோகத்தர்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

மேலும், நூலகம் எரியூட்டப்பட்ட சம்பவம் கேள்விப்பட்டவுடன் மாரடைப்பால் உயிரிழந்த அருட்தந்தை மற்றும் நூலக நிறுவுனரின் திருவுருவப்படத்துக்கு பொதுச்சுடர் ஏற்றப்பட்டு, மலரஞ்சலி செலுத்தப்பட்டு அஞ்சலி உரைகளும் இடம்பெற்றன.

சமையல் எரிவாயு விநியோகத்துக்கான

# திட்டம் வெற்றி

ரஞ்சித் ராஜபக்‌ஷ

ஹட்டன் நகரில் சமையல் எரிவாயு விநியோகத்துக்காக கினிகத்தேனை அம்பகமுவ பிரதேச செயலகத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய திட்டம் வெற்றியளித்துள்ளதாக நுகர்வோர் தெரிவிக்கின்றனர்.

ஹட்டன்-டிக்கோயா நகர சபைக்குட்பட்ட பகுதிகளில் சமையல் எரிவாயு சிலிண்டர்களை உரியமுறையில் விநியோகிப்பதற்காக, கடந்த 2 தினங்களாக பதிவு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வந்தன.

இதற்கமைய நேற்று (1) லிட்ரோ நிறுவனத்தால் ஹட்டனுக்கு 500 சிலிண்டர்கள் விநியோகிக்கப்பட்ட நிலையில், அதனை நுகர்வோர் எவ்வித சிரமங்களும் இன்றி, வரிசைகளில் நிற்காமல் பெற்றுச் சென்றதை அவதானிக்க கூடியதாக இருந்தது. ஹட்டன் பிரதேசத்துக்கு பொறுப்பாக கிராம உத்தியோகத்தர்களின் மேற்பார்வையில் இவ்வாறு சமையல் எரிவாயு விநியோகிக்கப்பட்டதுடன். பொலிஸாரும் இராணுவத்தினரும் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபட்டிருந்தனர்.

இதேவேளை, சமையல் எரிவாயு சிலிண்டர்களைப் பெற்றுக்கொண்ட நுகர்வோர் கருத்து தெரிவிக்கையில், அம்பகமுவ பிரதேச செயலகம் ஊடாகத் தாம் பதிவு செய்யப்பட்டதன் பின்னர், நேற்று முன்தினம் (31) மாலை தமக்கு தொலைபேசி மூலம் அறிவிக்கப்பட்டதாகவும் இதனால் தாம் எந்த வரிசைகளிலும் நிற்காமல் எரிவாயுவைப் பெற்றுக்கொண்டதாகத் தெரிவித்தனர்.

இதேவேளை, ஹட்டன் நகரிலுள்ள ஹோட்டல்களுக்கு சமையல் எரிவாயு சிலிண்டர்களை விநியோகிப்பதற்கு தனியான முறையொன்றை அறிமுகப்படுத்தி, அதன்மூலம் அவர்களுக்குத் தேவையான சிலிண்டர்களை விநியோகிக்க நடவடிக்கை எடுப்பதாக கினிகத்தேனை பிரதேச செயலாளர் சித்தாரா கமகே தெரிவித்துள்ளார்.

ஹட்டன் நகரில் நுகர்வோர் பேக்கரி, சிற்றுண்டிச்சாலைகளின் உரிமையாளர்கள் என 4,500 பேர், இதுவரை சமையல் எரிவாயுக்காக பதிவு செய்துள்ளதாகவும் அவர்களின் பதிவுகளுக்கு அமைய அவர்களுக்கான சமையல் எரிவாயு விநியோகிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

தமிழக நிவாரணங்கள் தேவையின் அடிப்படையில்

## இன, மத பேதமின்றி வழங்கப்பட வேண்டும்

எஸ்.கணேசன்



தமிழ் நாட்டு அரசாங்கம் வழங்கியுள்ள பொருட்கள் தேவையின் அடிப்படையில் வறிய மக்களுக்கு இன, மத பேதமின்றி வழங்கப்பட வேண்டும் என மலையக மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் ஆர்.ராஜாராம் வலியுறுத்தியுள்ளார்.

ஹட்டனில் நேற்று முன்தினம் (31) நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்து வெளியிட்ட போதே, மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர்;

இந்த மனிதாபிமான உதவிகளைப் பகிர்ந்தளிக்கும் விடயத்தில், அரசியல் ஆதாயம் கருதி செயற்படுவது வேதனையான விடயமாகும்.

மலையக மக்கள் முன்னணியோ, தமிழ் முற்போக்கு கூட்டணியோ இந்த மனிதாபிமான உதவிகளை வழங்கும் நடவடிக்கையை அரசியல் கண்ணோட்டத்துடன் பார்க்காது.

வடக்கு, கிழக்கில் மேற்கொள்ளப்படுவதை போன்று அரசாங்க அதிபர், உதவி இந்திய உயர்ஸ்தானிகர் அலுவலகங்கள் ஊடாக மலையகப் பகுதிகளிலும் இந்த உதவிப்பொருட்கள் வழங்கப்பட வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

தமிழ் நாட்டு மக்கள் வழங்கிய மனிதாபிமான உதவிகளையும் கச்சதீவு மீட்பு கோரிக்கையையும் இணைத்து கருத்து வெளியிடுவது மனிதாபிமான அற்ற ஒன்றாகும்.

கச்சதீவு மீட்பு கோரிக்கை என்பது, அரசியல் ரீதியானது. அதனை மனிதாபிமான உதவிப் பொருட்களை வழங்கும் விடயத்துடன் தொடர்புபடுத்தக் கூடாது எனவும் மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் ஆர். ராஜாராம் தெரிவித்துள்ளார்.



எரிவாயு கூப்பனுக்கும்

## சிலிண்டர் கிடைக்கவில்லை

### அழைப்பை தவறவிட்ட நுகர்வோர் குற்றச்சாட்டு

எம்.பிரபா

எரிவாயு வரிசையை தவிர்க்கவும் எரிவாயு விநியோகத்தில் இடம்பெறும் மோசடிகளைத் தடுக்கவும் ஹட்டன் - டிக்கோயா நகர சபை எல்லைக்குட்பட்ட நான்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில் வசிப்பவர்களுக்கு கூப்பன் பெற்றுக் கொடுக்கும் நடவடிக்கை கடந்த இரண்டு நாள்களாக முன்னெடுக்கப்பட்டது.

விநியோகிக்கப்பட்ட கூப்பன்களுக்கு நேற்று (1) ஹட்டனில் சமையல் எரிவாயு சிலிண்டர் விநியோகிக்கப்பட்டது.

கொட்டும் மழையையும் பொருட்படுத்தாது தமக்கான எரிவாயுவை பெற்றுக் கொள்ள கூப்பன்களுடன் வருகை தந்தவர்களில் பலருக்கு எரிவாயு கிடைக்கவில்லை.

எரிவாயு கிடைக்காதவர்கள் தமது அலைபேசிக்கு அம்பகமுவை செயலகத்தில் இருந்து அழைப்புகள் கிடைக்கவில்லை. அதனால் தமக்கான எரிவாயு கிடைக்கவில்லை என தெரிவித்த அதேவேளை, மேலும் சிலரோ தாம் பிரதேச செயலகத்கதின் அழைப்புகளை தவற விட்டுள்ளதாகவும் அதனால் தமக்கு எரிவாயு இல்லை என்றும் விநியோக நிலையத்தில் தெரிவிக்கப்பட்டதாகவும் தெரிவித்தனர்.

கேகாலை– புளத்கொஹுபிட்டிய வீதியில்

## பாறைகள் சரிந்து விழும் அபாயம்

என்.ஆராச்சி

நாட்டின் பல பிரதேசங்களிலும் கடந்த சில தினங்களாக பெய்து வரும் கடும் மழையுடனான வானிலையால், ஆங்காங்கே சிறியளவு வெள்ளம், மண்சரிவுகள் என்பன ஏற்பட்டுள்ளன.

இதற்கமைய, கேகாலை-புளத்கொஹுபிட்டிய வீதியின் இலும்பஹேன பிரதேசத்தில் கற்பாறைகள் சரிந்து வீதிக்கு வரத் தொடங்கியுள்ளன.

இவ்வாறு சரிந்து விழுந்துள்ள கற்களை அப்புறப்படுத்த நேற்று (01) வரை நடவடிக்கைகள் எதுவும் முன்னெடுக்கப்பட்டு இருக்கவில்லை.

குறித்த கற்பாறையின் மிகுதிப் பகுதிகள் எப்போழுதும் சரிந்து விழும் அபாயத்தில் இருப்பதால், இந்த வீதியைப் பயன்படுத்துபவர்கள் அவதானமாக பயன்படுத்துமாறும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.



உதவும் கரங்கள் அமைப்பின்

## கல்விக்கு கரம் கொடுப்போம்



செ.தி. பெருமாள்

இரத்தினபுரி உதவும் கரங்கள் அமைப்பால் முன்னெடுக்கப்படுகின்ற 1,000 மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கும் இரண்டாவது செயற்திட்டம் ஹட்டன் கல்வி வலயத்துக்கு உட்பட்ட ம/மா நு/ஹட்/ கிளனுகி தமிழ் வித்தியாலயம், சாமிமலை ம/மா நு/ஹட்/ பாரதி தமிழ் வித்தியாலயம் ஆகியவற்றில் நேற்றைய தினம் (01) முன்னெடுக்கப்பட்டது.

லிந்துலை நு/ மவுஸா எல்ல தமிழ் வித்தியாலயத்திலும் முன்னெடுக்கப்பட்டது.

இச்செயற்திட்டமானது, கண்டி, மாத்தளை, பதுளை, மாத்தறை, களுத்துறை காலி, இரத்தினபுரி போன்ற மாவட்டங்களில் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மாணவர்களுக்காக முன்னெடுக்கப்படுவதாக அமைப்பின் தலைவர்.ஆர். ரமேஷ்வரன் தெரிவித்துள்ளார்.



# மழை....

மலையகத்தில் தொடர்ச்சியாகப் பெய்து வரும் மழை காரணமாக, இரத்தினபுரி, தலவாக்கலை, ஹட்டன் உள்ளிட்ட பல இடங்களில் மண்சரிவு, வெள்ளம் உள்ளிட்ட சில சிறியளவு அனர்த்தங்கள் பதிவாகியுள்ளதுடன், நீர்த்தேக்கங்களின் நீர்மட்டமும் அதிகரித்துள்ளது. அத்துடன் பொல்கொல்லை நீர்த்தேக்கத்தின் நான்கு வான் கதவுகள் நேற்று முன்தினம் (31) திறக்கப்பட்டன.

(மலையக நிருபர்கள்)













இரத்தினபுரி மாவட்டத்தில் சீரற்ற வானிலையால்

## 1,682 பேர் பாதிப்பு

### ஒருவர் உயிரிழப்பு

அஜித்லால் சாந்தஉதய

கடந்த சில நாள்களாக இரத்தினபுரி மாவட்டத்தில் நிலவும் சீரற்ற வானிலையால், இதுவரை 435 குடும்பங்களைச் சேர்ந்த 1,682 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என, இரத்தினபுரி மாவட்ட செயலாளர் மாலனி லொக்குபோத்தாகம தெரிவித்துள்ளார்.

வெள்ளம், அதிக காற்று, மரம் முறிந்து விழுந்தமை உள்ளிட்ட அனர்த்தங்களால் ஒருவர் உயிரிழந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கிரிஎல்ல பிரதேச செயலகப் அலுவலகத்தின் அனர்த்த நிவாரண சேவை அதிகாரியாக பணியாற்றிய 41 வயதான ஒருவரே வெள்ளத்தில் இழுத்துச் செல்லப்பட்டு உயிரிழந்துள்ளார்.

மண்சரிவு இடம்பெற்ற பகுதியொன்றை பரிசோதிக்க சென்ற போதே வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டு உயிரிழந்தார் என இரத்தினபுரி மாவட்ட செயலாளர் மாலனி லொக்குபோத்தாகம தெரிவித்துள்ளார்.

இரத்தினபுரி, குருவிட்ட, எஹலியகொட, கிரிஎல்ல, பெல்மடுல்ல, நிவித்திகல, அயகம, கலவான, கொடகவெல ஆகிய 9 பிரதேச செயலகப் பிரிவுகளிலும் 60 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் அனர்த்தங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.



## தங்கை கர்ப்பிணி; அண்ணன் கைது

மொனராகலை, எத்திமலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொடியாகல பிரதேசத்தில் வசிக்கும் 13 வயதான தனது தங்கையை கர்ப்பிணியாக்கிய 16 வயதான சகோதரனை பொலிஸார் கைது செய்துள்ளார்.

தங்கை ஆறாம் வகுப்பில் கல்வி பயிற்று வருபவர் என்றும் சகோதரன் 11 வகுப்பில் பயின்று வருகின்றார் என்றும், இவ்விருவரும் ஒரே பாடசாலையிலேயே கற்று வருகின்றனர் எனவும், பெற்றோர் வீட்டில் இல்லாத நேரங்களில் இருவரும் பாலியல் உறவில் ஈடுபட்டுள்ளனர் என்பது விசாரணைகளில் இருந்து கண்டறியப்பட்டுள்ளது.

சிறுமி வயிற்றுவலியால் அவஸ்தைபட்டபோது, அவரை பெற்றோர் வைத்தியசாலைக்கு அழைத்துச்சென்றுள்ளனர். அதன்போதே, சிறுமி கர்ப்பிணியாக இருக்கும் விடயம் வெளியானது. சிறுமியிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில், தன்னுடைய சகோதரனே துஷ்பிரயோகம் செய்துள்ள விடயத்தைக் கூறியுள்ளார்.

மேலதிக வைத்திய பரிசோதனைக்காக சிறுமி, மொனராகலை மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். சகோதரனை கைது செய்துள்ள பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# தயார்படுத்தலில் ஆகக்கூடுதலான கவனத்தை செலுத்தவும்

ஆட்சியாளர்களுக்கு பிரச்சினைகள் வரும்போது, அதிகாரிகளின் தலையில் சுமத்திவிட்டு, மெதுவாக நழுவிவிடும் போக்கை, இன்று நேற்றல்ல, பலவருடங்களாகவே நாங்கள் பார்த்திருக்கின்றோம். அந்தளவுக்கு பந்தை பறிமாற்றம் செய்வதில், அரசியல்வாதிகள் நன்கு கைதேர்ந்தவர்களாக இருக்கின்றனர்.

அரசியல்வாதிகளின் கட்டளையின் பிரகாரம் செயற்படுவதற்கு, அரச அதிகாரிகள் ஒருசிலரைத் தவிர, பெரும்பாலானோர் தங்களை பழக்கப்படுத்திக் கொண்டுள்ளனர். அதற்குப் பிரதான காரணமாக அமைவது, தொழில் மீதான பயமும் இடமாற்ற அச்சமும் ஆகும்.

அரசியல்வாதிகள் என்னதான் கட்டளையிட்டாலும், நன்மை, தீமைகளைத் தேடியறிந்து, ஆலோசனைகளை பெற்று, அதனைத் தெளிவுப்படுத்தும் வல்லமை கொண்ட அதிகாரிகள் இருந்தனர். இன்னும் இருக்கத்தான் செய்கின்றனர். அவ்வாறானாவர்களே தற்போதைய நிலைமையில் நாட்டுக்குத் தேவையானவர்களாவர்.

பெரும்போகத்துக்கு இரசாயன உரம் இல்லாமைக்கான முழுப்பொறுப்பையும் ஜனாதிபதி மட்டுமே ஏற்றுக்கொள்ளமுடியாது. அவருக்கு ஆலோசனை வழங்கியவர்களும் பொறுப்பை ஏற்கவேண்டும்.

அவ்வாறு ஒவ்வொரு தவறான தீர்மானங்களுக்கும் தண்டனைகள் வழங்கப்படுமாயின், அரசியல்வாதிகள் கூறியதற்கெல்லாம் தலையசைத்த அதிகாரிகள் பலரைத் தண்டிக்கவேண்டும்.

இது இவ்வாறிருக்க, முதலாவது தடை தாண்டல் என்றால், கல்விப் பொதுத் தராதர சாதாரணதரப் பரீட்சையாகும். 2021 ஆம் ஆண்டுக்கான பரீட்சை, நேற்றுடன் (01) நிறைவடைந்துவிட்டது. நாட்டில் ஏற்பட்டிருந்த மோசமான வானிலை காரணமாக, பரீட்சார்த்திகள் பலரும் பெரும் அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்தனர்.

பரீட்சை ஆரம்பமான நாள் முதலிருந்தே முறையான போக்குவரத்து இன்மையால், வீதிகளில் செல்லும் வாகனங்கள், நகரங்களுக்கு வரும் லொறிகள், ட்ரக்டர்களில் ஏறி, பரீட்சை நிலையங்களுக்கு வரவேண்டிய துர்ப்பாக்கிய நிலைமைக்கு முகங்கொடுத்திருந்தனர்.

இன்னும் சில பிரதேசங்களில், தங்களுடைய செலவில் எரிபொருட்களை நிரப்பிக்கொண்டு, பரீட்சார்த்திகளுக்கு இலவசமாக போக்குவரத்துச் சேவைகளை சிலர் வழங்கியிருந்தனர். அவ்வாறானவர்களின் மனிதாபிமானத்தை என்றென்றும் மறந்துவிடக்கூடாது. தங்களுடைய சமூகத்தை சேர்ந்தவர்களின் முன்னேற்றத்துக்காக, நெருக்கடியான நிலையிலும் கூட, பேருதவியைச் செய்திருக்கின்றனர்.

பரீட்சை நிலையங்களுக்குச் செல்லமுடியாத அளவுக்கு வெள்ளம் தேங்கியிருந்தபோது, பரீட்சார்த்திகள் மண்டபத்துக்குள் செல்லும் வகையில், கதிரைகள், மேசைகளை அடுக்கி, தற்காலிக பாலங்களை அமைத்த இராணுவத்தினர், பரீட்சார்த்திகளுக்கு கரம்கொடுத்தனர்.

இந்நிலையில், பரீட்சை நிலையங்களுக்கு குடை பிடித்துக்கொண்டு விடையளிக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலையும் ஏற்பட்டது. மத்திய நிலையங்களை தேர்ந்தெடுக்கும் போது, அதிகாரிகள் கூடுதல் கவனத்தை செலுத்தியிருந்தால், இவ்வாறான சிக்கல்களுக்கு முகங்கொடுத்திருக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைமை ஏற்பட்டிருக்காது.

பரீட்சை நிலையங்களாக தேர்ந்தெடுக்கும் பாடசாலை மண்டபங்கள் தொடர்பில், அதிபர்களுடன் கலந்துரையாடி ஆக்கபூர்வமான முடிவுகளை எடுத்தல் அவசியம். எதிர்கால சந்ததியினரை கருத்திற்கொண்டு, எதிர்காலம் கருதியும் சரியான முடிவுகளை எடுக்கவேண்டும் என்பதே எமது அவாவாகும்.

தமிழ்Mirror க்கு எழுதுங்கள் www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

கல்வியில் தீவிரமாக ஈடுபடும்போதுதான் ஏன், எதற்கு, எப்படி போன்ற கேள்விகள் தோன்றுகின்றன. இவை கேட்கப்பட வேண்டிய கேள்விகள்தான். கற்றலின்போது சந்தேகங்கள் எழுந்தால், மூளை தீவிரமான ஆராய்ச்சியில் ஈடுபடுகின்றது எனப் பொருள்.

தேடலில் ஈடுபடாமல் அறிவு துலங்கப்போவதில்லை. கல்வியில் சுயதேடல் முக்கியமானது. பாடங்களை மனனம் செய்தால் மட்டும் போதுமானது இல்லை. கற்ற பாடங்களின் உட்கருத்தை ஆராயும் வேளை, சந்தேகங்களை ஆசிரியரிடம் கேட்க வெட்கப்படத் தேவையில்லை.

எல்லாவற்றையும் அறிய ஆவல்படுபவர்கள், முயற்சி செய்தேயாக வேண்டும். நூல்களை வாசித்தல், கேட்டல், அறிஞர்களின் தொடர்புகளைப் பேணுதல் போன்றவை கற்றலுக்கு அவசியமானவை ஆகும். மிகவும் முக்கியமானது, நூலகங்களுக்குச் சென்று நூல்களைப் பெற்று, புதுப்புது விடயங்களை அறிந்துகொள்ள வேண்டும். அறிவு பரந்தது. ஒருவர் அல்லது பலரிடம் கல்வி கற்பதுபோலவே, நூலகங்களுடன் தோழமை கொள்வதும் நல்லது. கல்வியறிவு சுவாரஸ்யமானது.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### தனியார் கல்விக்கூடங்களுக்கு ஏன் இந்த அவசரம்?

தற்போது க.பொ.த சாதாரணதரப் பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான, புதிய உயர்தர வகுப்புகளை, அம் மாணவர்களின் நலன் கருதி, சற்று காலதாமதமாக ஆரம்பிக்குமாறு கோரிக்கை முன்வைக்கப்படுகின்றது.

கல்முனை பிரதேச தனியார் கல்விக் கூடங்கள், சாதாரண தர பரீட்சை முடிவடைந்த மறுநாளே, உயர்தர வகுப்புகளை ஆரம்பிக்க விளம்பரம் செய்து வருகின்றன. இது மாணவர்களின் உடல்உள நலத்துக்கு நல்லதல்ல என்று, கல்வியியலாளர்களும் மருத்துவர்களும் கூறுகின்றனர். க. பொ. த. (சா/த) பரீட்சை நேற்றைய (01) தினம்தான் முடிவடைந்துள்ளது. அதற்கிடையில், தனியார் கல்விக்கூடங்கள் முண்டியடித்துக்கொண்டு, அடுத்த பருவகால உயர்தர கற்கைநெறிகளுக்கான விளம்பரங்களை ஆரம்பித்துவிட்டன. ஏனிந்த அவசரம்?

நிச்சயமாக இந்த அவசரம், மாணவர் நலனுக்காகவன்றி, பணம் சம்பாதிக்கும் இலக்கின் வெறித்தனமாகவே இருக்கமுடியும். புனிதமான இரண்டு துறைகளான வைத்தியமும் கல்வியும் இன்று 'மாபியா'க்களால் ஆக்கிரமிக்கப்பட்டுவிட்டன.

ஓரிரு மாதங்களுக்கு மாணவர்களை ஓய்வெடுக்கவிட வேண்டும். ஆன்மிக ரீதியில் அவர்களைப் புடம்போட, சற்றுக் கால அவகாசம் கொடுக்கப்பட வேண்டும். பெற்றோர் இந்த விடயத்தில் அக்கறை காட்ட வேண்டும். ஆன்மிக ரீதியான உந்துதல் இல்லாத வெறும் ஏட்டுக்கல்வியும், இன்றைய இளம் சந்ததியினர் போதைப்பொருள் உட்பட்ட பல்வேறு சீரழிவுகளுக்குள் வீழ்வதற்கு காரணமாகின்றது.

தனியார் கல்விக்கூடங்களே! உங்களின் பணம் சம்பாதிக்கும் வெறியை கொஞ்சம் தளர்த்தி, பரீட்சை முடிந்த மறுநாளே உயர்தர கற்கையை ஆரம்பிக்காமல் சற்றுப் பின்போடுங்கள்.

–த. சகாதேவராஜா

ஜனாதிபதியாகும் கனவில்

# 21ஆவது திருத்தத்தை பலிகொடுக்கும் ரணில்



புருஜோத்தமன் தங்கமயில்

நிறைவேற்று அதிகார ஜனாதிபதியின் அதிகாரங்களை, பாராளுமன்றத்திடம் பாரப்படுத்தும் 21ஆவது திருத்தச் சட்டம் நிறைவேற்றப்படுவதற்கான வாய்ப்புகளை இல்லாமல் ஆக்கும் செயற்பாடுகளில், ராஜபக்ஷர்களும் புதிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் இணைந்து ஈடுபட்டு வருகிறார்கள்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையைத் தக்கவைத்தால் மாத்திரமே, மீண்டும் அதிகாரத்துக்கு வருவது குறித்து, தாங்கள் முயற்சிக்க முடியும் என்பது (மஹிந்த) ராஜபக்ஷர்களின் நிலையாகக் காணப்படுகின்றது.

ரணில் விக்கிரமசிங்கவைப் பொறுத்தளவில், கடந்த காலங்களில், தான் அடைய முடியாத, நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பதவியை அடைவதற்கான வாய்ப்புகள், தற்போது ஏற்பட்டிருப்பதாக நம்புகிறார். அதனால், ஜனாதிபதி முறையைத் தக்க வைப்பதற்கான சூழ்ச்சிகளை அவர், ராஜபக்ஷர்களோடு இணைந்து அரங்கேற்றத் தொடங்கிவிட்டார்.

ராஜபக்ஷர்களை வீட்டுக்கு விரட்டும் போராட்டம், தென் இலங்கையில் வீச்சம் பெற்ற போது, ராஜபக்ஷர்கள் அற்ற புதிய அரசாங்கத்தின் தேவைக்கான கோசமும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறை ஒழிப்புக்கான குரலும் சேர்ந்தே எழுந்தன. யாருக்கும் பொறுப்புக்கூறாத அதிகாரங்களைக் கொண்டிருக்கின்ற ஜனாதிபதி முறைமையாலேயே, தனிநபர் தீர்மானங்களால் நாடு படுபாதாளத்தில் வீழ்ந்திருப்பதான உண்மையை, தென் இலங்கை உணரத் தொடங்கிவிட்டது.

அதனால், நிறைவேற்று ஜனாதிபதி பதவியை நீக்க வேண்டும் என்கிற ஜனநாயகக் கோரிக்கை, ராஜபக்ஷர்களுக்கு எதிரான போராட்டக் களங்களிலும் பாராளுமன்றத்துக்கு உள்ளேயும் முன்வைக்கப்பட்டன. மக்களின் உணர்வுகளுக்கும் கோரிக்கைகளுக்கும் மதிப்பளித்து, முதற்கட்டமாக நிறைவேற்று ஜனாதிபதி முறையைக் கட்டுப்படுத்தும் முகமாக, 21ஆவது திருத்தச் சட்டத்தை முன்வைப்பது தொடர்பில், எதிர்க்கட்சிகள் இணைந்து தீர்மானத்துக்கு வந்தன. அப்போது, எதிர்க்கட்சி வரிசையில் ஒற்றை உறுப்பினராக இருந்த ரணிலும், அதற்கான முழு ஆதரவையும் வழங்கிச் செயற்பட்டார்.

ஆனால், சில வாரங்களுக்குள்ளேயே அவருக்கும் ராஜபக்ஷர்களுக்கும் இடையிலான அரசியல் உடன்பாடுகளை அடுத்து, அவர் பிரதமர் பதவியை ஏற்றுக்கொண்டார். அத்தோடு 21ஆவது திருத்தம் பற்றியோ, ஜனாதிபதி முறை ஒழிப்புப் பற்றியோ பேசுவதை, ரணில் தவிர்த்துக் கொள்ளத் தொடங்கினார்.

நல்லாட்சிக் காலத்தில், நிறைவேற்று ஜனாதிபதியின் அதிகாரங்களை பாராளுமன்றத்தோடு பகிரும் 19ஆவது திருத்தச் சட்டம், அப்போதையை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் தலைமையில் முன்னெடுக்கப்பட்டது. அப்போது எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்திருந்த ராஜபக்ஷர்களும்கூட, அதற்கு ஆதரவாக வாக்களித்திருந்தனர். ஆனால், 19ஆவது திருத்தச் சட்டத்தின் மூலம், ஜனாதிபதிக்கும் பாராளுமன்றத்துக்கும் இடையில் பகிரப்பட்ட அதிகாரங்களின் எல்லைகள் தொடர்பில் எந்தவித சிந்தனையும் இன்றி, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் பதவியில் இருந்து ரணில் விக்கிரமசிங்கவை நீக்க எடுத்த முயற்சிகளை அடுத்து, அரசியல் குழப்பநிலை ஏற்பட்டது.

அப்போது, 19ஆவது திருத்தம் பாராளுமன்றத்துக்கு வழங்கியிருக்கின்ற அதிகாரங்களை, ஜனாதிபதியால் நினைத்த மாத்திரத்தில் நீக்கிவிட முடியாது என்கிற விடயத்தை, உயர்நீதிமன்றம் உறுதி செய்தது. ரணில் விக்கிரமசிங்கவின் பிரதமர் பதவி நீக்கத்தையும் வறிதாக்கியது.

இதனால், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் பதவியில் ரணில் விக்கிரம சிங்கவைத் தொடர அனுமதிக்க வேண்டி வந்தது. மைத்திரிக்கும் ரணிலுக்கும் இடையிலான இந்தப் பிடுங்குப்பாடுகளுக்கு இடையில், ராஜபக்ஷர்கள் ஆட்சியமைக்க முயன்று அசிங்கப்பட்டதால், 19ஆவது திருத்தச் சட்டத்தை நீக்குவது தொடர்பில் கவனமாக இருந்தார்கள்.

எந்தவொரு காலத்திலும், பாராளுமன்றம் ஜனாதிபதிக்கு மேலான அதிகாரங்களைக் கொண்டிருக்கக் கூடாது. அப்படியான சந்தர்ப்பம் ஏற்பட்டால், தங்களால் பாராளுமன்ற உறுப்பினர்களையோ, கட்சியையோ கூட கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொள்ள முடியாத நிலை ஏற்படும் என்று ராஜபக்ஷர்கள் நினைத்தார்கள். அதனால்தான், ராஜபக்ஷர்கள் மீண்டும் ஆட்சிக்கு வந்ததும் 20ஆவது திருத்தச் சட்டத்தை கொண்டு வந்து, 19ஆவது திருத்தச் சட்டத்தைக் கிட்டத்தட்ட ஏதுமற்ற ஒன்றாக மாற்றினார்கள்.

ஆரம்பத்தில் அதனை அவர்கள் தங்களுக்குச் சாதகமான ஒன்றாக நினைத்தாலும், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் இராணுவ சிந்தனையும் ஆட்சிக்குள் இராணுவ அதிகாரிகள், முகவர்களின் அதீத பிரசன்னமும், அரசாங்க நிர்வாகக் கட்டமைப்பில் குழப்பங்களை ஏற்படுத்தத் தொடங்கின.

இதனால், ஜனாதிபதி என்கிற ஒற்றை மனிதரைச் சுற்றி, அதிகார பீடம் கட்டமைக்கப்பட்டது. அதனால், பிரதமர் பதவியிலிருந்த மஹிந்த ராஜபக்ஷ செல்லாக் காசாகினார். அதுதான், ராஜபக்ஷர்களை வீட்டுக்கு அனுப்பும் போராட்டத்தில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தன்னைப் பாதுகாத்துக் கொள்ள, மஹிந்த ராஜபக்ஷவை பகடையாக வைத்து ஆடவும் வைத்தது.

ஆனாலும் இன்றைக்கும் கூட, நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ராஜபக்ஷர்கள், குறிப்பாக மஹிந்தவும் அவரது மகன் நாமல் ராஜபக்ஷவும் தக்க வைத்துக் கொள்வதற்கு முயல்வதற்குப் பின்னால், எதிர்கால ஆட்சிக்கனவு என்கிற விடயமும் இருக்கின்றது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, தன்னுடைய பதவிக்காலம் முடிந்தவுடன் அரசியலுக்கு விடைகொடுத்துச் செல்லும் நிலை ஏற்பட்டுவிட்டது. தென் இலங்கை மக்கள் முன்னால், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் வாக்குக் கேட்டு, இனிச் செல்ல முடியாது. கோட்டாவின் காலத்தோடு, பசில் ராஜபக்ஷவின் அரசியலுக்கான காலமும் முடிவுக்கு வந்துவிடும் என்று மஹிந்த ராஜபக்ஷ நம்புகிறார்.

ஆனால், தன்னுடைய மகனின் எதிர்காலம் குறித்து, அவருக்கு இருக்கும் கனவு மிகப்பெரியது. அதற்காக அவர், தன்னால் எவ்வளவு காலமானாலும் உடல் நிலை ஒத்துழைக்கவில்லை என்றாலும் அரசியலில் நீடித்திருக்க விரும்புகிறார். அதற்காக, பொதுஜன பெரமுன என்கிற கட்சியை கைக்குள் வைத்துக் கொள்ள நினைக்கிறார். அதன்மூலம், இன்னோர் ஐந்து ஆண்டுகளுக்குப் பின்னரான, தன்னுடைய மகனை முன்னிறுத்திய அதிகார ஆட்டத்தை ஆடலாம் என்பது அவரது நிலைப்பாடு. அதற்காக, ஜனாதிபதி பதவி என்கிற அதிகாரமுள்ள கட்டமைப்பு சிதைக்கப்படாமல் காக்கப்பட வேண்டும்.

இன்று, ராஜபக்ஷர்களுக்கு எதிரான தென் இலங்கை கிளர்ந்தெழுந்தாலும், அடுத்து ஆட்சியில் அமரப்போகிறவர்களாலும் நாட்டின் பொருளாதாரத்தை சீரமைப்பதற்கான வாய்ப்புகள் பெரிதாக இல்லை என்பதால், அரசியலில் பொறுமை காத்தல், தங்களுக்கு ஆட்சிக்கனியை வாய்க்கப்பண்ணும் என்பது மஹிந்தவின் எதிர்பார்ப்பு. குறிப்பாக, தங்களுக்கு எதிரான மனோநிலையை, தென் இலங்கை மக்கள் மாற்றுவார்கள் அல்லது, மறப்பார்கள் என்பது அதன் அடிப்படை.

ரணில் விக்கிரமசிங்கவைப் பொறுத்தளவில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் காலத்துக்குப் பின்னரான ஜனாதிபதி தேர்தலை, அவர் குறி வைக்கின்றார். அடுத்த ஜனாதிபதி தேர்தலில், எதிர்க்கட்சிகளில் சார்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் சஜித் பிரேமதாஸ போட்டியிடும் வாய்ப்புகள் உண்டு.

ஆனால், ராஜபக்ஷர்களின் பொதுஜன பெரமுன சார்பில், வேட்பாளர் ஒருவர் நிறுத்தப்படுவதற்கான வாய்ப்புகள் இல்லை. ஏனெனில், ராஜபக்ஷர்களை மீறி இன்னோருவரை அவர்கள் ஜனாதிபதி பதவிக்கு அனுமதிப்பதற்கு வாய்ப்புகள் இல்லை. அப்படியான நிலையில், ஐக்கிய தேசிய கட்சியின் சார்பில் தான் போட்டியிடும் போது, பொதுஜன பெரமுனவின் வாக்குகள் தனக்குக் கிடைப்பதற்கான வாய்ப்புகள் இருப்பதாக ரணில் விக்கிரமசிங்க கணக்குப் போடுகிறார். அதாவது, ரணில் எதிர் சஜித் எனும் இருமுனைப் போட்டி குறித்து, அவர் கனவு காண்கிறார்.

இப்போதுள்ள நெருக்கடி நிலையை சற்றுத் தணித்தாலே, தன்னுடைய வெற்றிக்கான வாய்ப்புகள் அதிகம் என்று ரணில் நம்புகிறார். அதனால்தான், கடந்த காலங்களில் தான் அடைய முடியாத நிறைவேற்று ஜனாதிபதி பதவியை, இன்னொரு முறை அடைவதற்கான முயற்சிகளில் அவர் ஈடுபடுகிறார். அதற்காக, 21ஆவது திருத்தச் சட்டத்தை பலிகொடுப்பதற்கு, ராஜபக்ஷர்களோடு இணைந்து, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் தயாராகிவிட்டர்.

புதுடெல்லி



குரங்கு அம்மை குறித்து

# வழிகாட்டல் நெறிமுறை

குரங்கம்மையைக் கட்டுப்படுத்துவது தொடர்பான வழிகாட்டல் நெறிமுறைகளை மத்திய அரசு வெளியிட்டுள்ளது. தொற்று பாதித்தவருடன் தொடர்பில் இருந்தவர்களை 21 நாள்கள் கண்காணிக்குமாறு கூறியுள்ளது.

உலகம் முழுவதும் 24 நாடுகளில் சுமார் 400 பேருக்கு குரங்கம்மை பாதித்து இருப்பதாக உலக சுகாதார அமைப்பு கூறியுள்ளது. இதை இப்போதே பெருந்தொற்றாக அறிவிக்க முடியாது என்றபோதிலும், இந்நோய் அதிகமாகப் பரவக்கூடியது என்று தெரிவித்துள்ளது.

இந்தியாவில் இதுவரை குரங்கம்மை நுழையவில்லை. இருப்பினும், பல நாடுகளில் பரவி இருப்பதால், அதைத் தடுப்பதற்கான விரிவான வழிகாட்டல் நெறிமுறைகளை மத்திய சுகாதார அமைச்சகம் வெளியிட்டுள்ளது.

குரங்கம்மை பாதித்தவர்களையும் மொத்தமாக பாதித்த இடங்களையும், விரைவாக அடையாளம் காண வேண்டும். மேற்கொண்டு பரவுவதை தடுக்க சம்பந்தப்பட்டவர்களை தனிமைப்படுத்த வேண்டும். அவர்களுடன் தொடர்பில் இருந்தவர்களை கண்டறிந்து கண்காணிக்க வேண்டும். குரங்கம்மை என சந்தேகத்துக்குரிய மாதிரிகளை புனேவில் உள்ள தேசிய வைரஸ் ஆய்வுக்கூடத்துக்கு அனுப்பி, உறுதி செய்ய வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

சென்னை

## கதவைப் பூட்டக் கூடாது; பாலியல் சேவை கூடாது



ஸ்பா, மசாஜ் நிலையங்கள், அழகு நிலையங்களுக்கு அனுமதி வழங்க 12 புதிய நிபந்தனைகளை சென்னை மாநகராட்சி அறிவித்துள்ளது. அவை பின்வருமாறு.

*கதவுகளை பூட்டி மசாஜ் சென்டர்கள் செயற்படக் கூடாது. வெளிப்புற கதவு திறந்தே இருக்க வேண்டும்.
*சி.சி.ரி.வி கண்காணிப்பு கெமராக்கள் கட்டாயம்.
*அனுமதிக்கப்பட்ட நேரத்தை கடந்து இயங்கக் கூடாது.
*வாடிக்கையாளர்களுக்கு தனி பதிவேடு கட்டாயம்.
* பாலியல் தொழில் தொடர்பான சேவைகள் வழங்கத் தடை.
*நோய் தொற்று உள்ளவர்களுக்கு சேவை வழங்கக் கூடாது.
*பக்க விளைவுகள் ஏற்படுத்த கூடிய அழகு சாதன பொருட்களை பயன்படுத்த கூடாது.
* முறைப்பாடுகளின் அடிப்படையில், பொலிஸார், மாநகராட்சி அதிகாரிகள் எப்போது வேண்டுமானாலும் ஆய்வு செய்வர்.
*ஒருவருக்கு சேவை வழங்கிய பின்னர், பணியாளர் தனது கையை சவர்க்காரம் கொண்டு கழுவ வேண்டும்.
*அடுத்த சேவையை வழங்க முன், கருவிகளை முறையாக சுத்தம் செய்ய வேண்டும்.
*உரிமம் விண்ணப்பிக்கும் நபர், உரிய படிப்பு படித்திருக்க வேண்டும்.
*விதிமீறல்கள் உறுதி செய்யப்பட்டால் உரிமம் இரத்து செய்யப்படும்.

கொச்சி

ஓரினச்சேர்க்கையாளர் விவகாரம்:

## பெற்றோர் பிரித்தனர்; இணைத்தது நீதிமன்று



கேரளாவில், பெற்றோர்களால் பிரிக்கப்பட்ட ஓரினச்சேர்க்கையாளர்களான இரு பெண்களை அம்மாநில உயர்நீதிமன்றம் இணைத்து வைத்து உத்தரவிட்டுள்ளது.

பாடசாலையில் படிக்கும் போது, இரண்டு மாணவிகள் தோழிகள் ஆகினர். ஒருகட்டத்தில் இருவரும் ஓரினச்சேர்க்கையாளர்கள் என்பது தெரியவந்தது. இருவீட்டாரும் எதிர்ப்பு தெரிவித்தனர். அதிலொரு பெண், வீட்டை விட்டுவெளியேறினார். இதனையறிந்த மற்றைய பெண்ணின் பெற்றோர், அப்பெண்ணை மறைத்துவைத்தனர்.

இந்நிலையில், வீட்டைவிட்டு வெளியேறியிருந்த பெண், கேரள உயர் நீதிமன்றத்தில் ஆட்கொணர்வு மனுவொன்றை தாக்கல் செய்தார். இந்த மனு நேற்றுமுன்தினம் (31) விசாரணைக்கு வந்தது.

தங்களுடைய மகளை மறைத்து வைத்திருந்த பெற்றோர், அப்பெண்ணை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர். அப்போது, தன் தோழியுடன் இணைந்து வாழ்வதையே விரும்புவதாக அந்தப் பெண் தெரிவித்தார். இருவரும் 18 வயதை கடந்தவர்கள் என்ற காரணத்தால், இருவரையும் சேர்ந்து வாழ நீதிமன்றம் அனுமதித்தது.

புதுக்கோட்டை

## "பா.ஜ.கவுக்கு சசிகலா வந்தால் வரவேற்போம்"



பாரதிய ஜனதா கட்சிக்கு (பா.ஜ.க) சகிக்கலா வந்தால் வரவேற்போம் என பா.ஜ.க தமிழக சட்டப்பேரவைக் குழுத் தலைவர் நயினார் நாகேந்திரன் தெரிவித்தார்.

"தமிழக முதலமைச்சர் கேட்டதற்குப் பிறகு பெட்ரோல், டீசல் விலையை மத்திய அரசு இரண்டு தடவைகள் குறைத்துள்ளது. அதே விகிதாசாரப்படி மாநில அரசும் விலையை குறைக்க வேண்டும்.

மத்திய அரசை ஒன்றிய அரசு என்று திராவிட முன்னேற்ற கழகத்தினர் (தி.மு.க) குறிப்பிட வேண்டாமென சட்டப்பேரவையில் பேசிய பிறகும்கூட மாற்றிக்கொள்ளவில்லை. தி.மு.க அரசாங்கம் தன்னை பெருமைப் படுத்திக்கொள்கிறதே தவிர, மக்கள் நலனில் அக்கறை காட்டவில்லை. மத்திய அரசு தேவையான நேரங்களில் கொடுக்க வேண்டிய நிதியை மாநிலங்களுக்கு கொடுத்துக்கொண்டுதான் இருக்கிறது. அதைத் தரவில்லை என்று குற்றம் சாட்டுவதே தி.மு.க அரசாங்கத்தின் நோக்கமாக உள்ளது என்றார்.

கொல்கத்தா

## காதலனை சந்திக்க நீந்திவந்த காதலி



வங்கதேசத்தை சேர்ந்த பெண்ணொருவர், இந்தியாவில் இருக்கும் காதலனை சந்திக்க ஆற்றின் வழியாக சட்ட விரோதமாக நீந்தி வந்து திருமணம் செய்துகொண்டுள்ளார்.

வங்கதேசத்தை சேர்ந்த 22 வயது இளம்பெண் கிருஷ்ணா மண்டல். இவர் சமூக வலைதளத்தின் வாயிலாக கொல்கத்தாவை சேர்ந்த அபிக் மண்டல் என்ற வாலிபரை காதலித்துள்ளார். இருவரும் நேரில் சந்திக்க முடிவு செய்துள்ளனர். ஆனால், கிருஷ்ணா மண்டலிடம் பாஸ்போர்ட் இல்லாததால் இந்தியா வர முடியாமல் தவித்துள்ளார். காதலனை பார்க்க வேண்டுமென உறுதியாக இருந்த அவர், சுந்தரவனக்காட்டில் இருந்து ஆற்றில் சுமார் ஒரு மணிநேரம் நீந்தி, இந்தியா வந்து சேர்ந்துள்ளார்.

சட்ட விரோதமாக இந்தியாவுக்குள் நுழைந்த காரணத்தால் பொலிஸாரால் கிருஷ்ணா கைது செய்யப்பட்டார். மேலும் வங்கதேச அதிகாரிகளிடம் கிருஷ்ணா மண்டல் ஒப்படைக்கப்படலாம் என கூறப்படுகிறது.

புதுடெல்லி

## சோனியா, ராகுலுக்கு நோட்டீஸ்



பணமோசடி வழக்கு தொடர்பாக நேரில் ஆஜராகும்படி காங்கிரஸ் தலைவர் சோனியா, அவரது மகன் ராகுல் ஆகியோரை எதிர்வரும் 8 ஆம் திகதியன்று ஆஜராகுமாறு அமலாக்கத்துறை அதிகாரிகள் நோட்டீஸ் அனுப்பியுள்ளனர்.

புதுடெல்லியை தலைமை இடமாகக் கொண்டு செயற்படும் 'யங் இந்தியா' என்ற அமைப்பு, நேஷனல் ஹெரால்டு பத்திரிகையை 2010இல் விலைக்கு வாங்கியது. காங்கிரஸ் தலைவர் சோனியா, அவரது மகன் ராகுல் உள்ளிட்டோர் இயக்குநர்களாக உள்ள இந்த அமைப்பு, பத்திரிகையை வாங்கியதில் மோசடி நடந்துள்ளதாக, பா.ஜ.கவைச் சேர்ந்த சுப்ரமணியன் சுவாமி வழக்கு தொடர்ந்தார். இதில் நடந்துள்ள பண மோசடி தொடர்பாக, அமலாக்கத் துறை விசாரித்து வருகிறது.

இது தொடர்பாக அக்கட்சியின் அபிசேக் சிங்வி கூறுகையில், 8 ஆம் திகதி சோனியா ஆஜராவார். ராகுல், இங்கிருந்தால், அன்றைய தினம் நேரில் ஆஜராவார். இல்லையெனில், வேறு திகதியைக் கேட்டு கோரிக்கை வைப்பார் எனக்கூறினார்.

கொல்கத்தா

## மறைந்த கேகேக்கு மரியாதை வேட்டு



பிரபல பின்னணிப் பாடகர் 'கேகே' என அழைக்கப்படும் 35 வயதான கிருஷ்ணகுமார் குன்னத், கொல்கத்தாவில் நடைபெற்ற இசை நிகழ்ச்சிக்குப் பிறகு திடீரென மயங்கி விழுந்தார். உடனடியாக அருகிலுள்ள தனியார் மருத்துவமனைக்கு அவர் அழைத்துச் செல்லப்பட்டார்.

இந்நிலையில் அவரை பரிசோதனை செய்த மருத்துவர்கள் அவர் மாரடைப்பு காரணமாக இறந்துவிட்டதாக தெரிவித்தனர். இந்தியத் திரையுலகின் பன்மொழிப் பாடகர்களில் ஒருவரான கேகே, ஹிந்தி, தமிழ், தெலுங்கு, கன்னடம், பெங்காலி உள்ளிட்ட பல மொழிகளில் பாடல்களைப் பதிவு செய்துள்ளார்.

இந்நிலையில் 'கேகே' இன் இறுதிச்சடங்கின் போது, துப்பாக்கி குண்டுகள் முழங்க அரசு மரியாதை வழங்கப்படும் என மேற்குவங்க முதலமைச்சர் மம்தா பானர்ஜி அறிவித்துள்ளார்.

**"'மின்சார கனவு' திரைப்படத்தின் ஸ்ட்ராபெர்ரி கண்ணே பாடல் மூலம் தமிழ் சினிமா ரசிகர்கள் மனதில் நீங்கா இடம் பிடித்தார்.**

'மின்சார கனவு' திரைப்படத்தின் ஸ்ட்ராபெர்ரி கண்ணே பாடல் மூலம் தமிழ் சினிமா ரசிகர்கள் மனதில் நீங்கா இடம் பிடித்த இவர். மன்மதன், காக்க காக்க, 7ஜி ரெயின்போ காலனி, கில்லி உட்பட ஏராளமான திரைப்படங்களில் பாடியுள்ளார்.

## நிவாரணம் வழங்கல்...



உலக வங்கியின் நிதிப் பங்களிப்புடன், சமுர்த்தி பயனாளிகளுக்கான விசேட நிவாரண வேலைத்திட்டம் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தினூடாக வழங்குவதற்கான ஏற்பாடுகள் அண்மையில் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

ஏ.எச்.ஏ. ஹுஸைன்





## விநியோகம்...

யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கான தமிழக நிவாரணப் பொருட்கள், ரயில் ஊடாக யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வரப்பட்டு, உடனடியாகவே விநியோகம் செய்யப்படுகின்றன.

எஸ்: தில்லைநாதன்










## வீதிமறியல்...

கிளிநொச்சியில் சமையல் எரிவாயு சிலிண்டர்களை பெற்றுக்கொள்வதற்கு நேற்று (01) காலை முதல் காத்திருந்த மக்கள், ஏ-9 வீதியை மறித்து போராட்டம் நடத்தினர்.





## நிவாரணம் கொடுப்பனவு...

சாய்ந்தமருது பிரதேச செயலகப் பிரிவில், வருமானம் குறைந்த குடும்பங்களுக்கு தலா 5,000 ரூபாய் நிவாரணக் கொடுப்பனவு வழங்கும் நடவடிக்கை நேற்று (01) ஆரம்பமானது.

(அஸ்லம் எஸ். மௌலானா)



## நினைவு கூர்ந்தனர்...

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைத் தேடி, வவுனியா பிரதான தபாலகத்துக்கு அருகாமையில் முன்னெடுக்கப்படும் போராட்டம், நேற்றுடன் (01) 1928ஆவது நாளைக் கடந்தது. போராட்டத்தில் ஈடுபடும் உறவினர்கள், யாழ். நூலக எரிப்பு நினைவுநாளான நேற்றைய தினத்தையும் நினைவு கூர்ந்தனர்.

(க. அகரன்)



ரஷ்யா

# உலகில் மிக ஆபத்தான விஷத்தை பயன்படுத்தும் ரஷ்யா




உலக நாடுகளின் எதிர்ப்புகளையும் மீறி, உக்ரேன் மீது ரஷ்யா கடந்த இரண்டு மாதங்களுக்கு மேலாகத் தாக்குதல் நடத்தி வருகின்றது.

இதன் காரணமாக அமெரிக்கா, கனடா, ரஷ்யா, அமெரிக்கா, பிரித்தானியா, பிரான்ஸ் உள்ளிட்ட பல நாடுகள் ரஷ்யா மீது கடுமையான பொருளாதாரத் தடைகளை விதித்து வருகின்றன.

இருப்பினும் இது குறித்து கவலைப்படாத ரஷ்ய ஜனாதிபதி புட்டின், “ரஷ்யா மீது பொருளாதாரத் தடைகளை விதித்துள்ள நாடுகளுக்கு பதிலடி தருவேன்” எனக் கூறி வருகிறார்.

இந்நிலையில் தற்போது புட்டின், தன் எதிரிகளைக் கொல்வதற்கு உலகில் அதிகம் ஆபத்தான விஷத்தைப் பயன்படுத்தி வருவதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

‘ஸ்ட்ரைக்னைன்’ என்ற பெயர்கொண்ட இந்த விஷம், ரஷ்ய உளவு நிறுவனமான கே.ஜி. பியால் பயன்படுத்தப்படுவதாகக் கூறப்படுகிறது.

இந்த விஷம் குறித்து நஞ்சியல் நிபுணர் நீல் பிராட்பரி கூறியதாவது; “ஸ்ட்ரைக்னைன் என்பது, உலகில் மிகவும் ஆபத்தான வேதிப்பொருள். இந்த விஷம் உடலுக்குள் போனவுடன், பயங்கர வலியைக் கொடுக்கும். எலும்புகள், தசைகளை ஒன்றாக இணைக்கும் பிணைப்பை உடைத்து, உடல் முற்றிலும் நடுக்கத்தை ஏற்படுத்தும்.

இந்த விஷம் மிக மெதுவாக செயற்பட்டு, பல மணி நேரத்துக்குப் பிறகு மனிதர்களைக் கொல்லும். அவர் சாகும்வரை, உடலில் உள்ள தசைகள் தொடர்ந்து வலியை உணர்ந்தபடியே இருக்கும்” இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மியான்மார்



# பஸ் தரிப்பிடம் அருகே குண்டு வெடிப்பு

### ஒருவர் உயிரிழப்பு

மியான்மர், யங்கூன் நகரில் பஸ் தரிப்பிடம் அருகே நடந்த வெடிகுண்டு தாக்குதலில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் (31) இடம்பெற்ற இக் குண்டு வெடிப்பில் 10 பேருக்கும் மேற்பட்டோர் படுகாயங்களுக்குள்ளான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் சம்பவ இடத்தில் இருந்து வெடிக்காத குண்டு ஒன்றைப் பாதுகாப்பு வீரர்கள் கண்டெடுத்துள்ளனர்.

மியான்மரில் 2021 ஆண்டு பெப்ரவரி மாதத்திலிருந்து இராணுவ ஆட்சி இடம்பெற்று வருகின்றது. இந்நிலையில் இராணுவ ஆட்சிக்கு எதிரான அமைப்பொன்றே குறித்த தாக்குதலை நடத்தியதாக மியான்மர் பாதுகாப்புத்துறை குற்றஞ்சாட்டியுள்ளது.

எனினும் எந்த அமைப்பும் இதுவரை இத் தாக்குதலுக்கு பொறுப்பேற்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.



ரஷ்யா



# ரஷ்ய இராணுவ வீரர் இருவருக்கு 11 ஆண்டுகால சிறை

நேட்டோ படையுடன் உக்ரேன் இணைவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து உக்ரேன் மீது ரஷ்யா கடந்த பெப்ரவரி மாதம் 24 ஆம் திகதியிலிருந்து தாக்குதல் நடத்தி வருகின்றது.

இந்நிலையில் உக்ரேனில் போர்க்குற்றச் செயல்களில் ஈடுபட்டதாக ரஷ்ய இராணுவ வீரர்களான அலெக்சாண்டர் போபிகின், அலெக்சாண்டர் இவானோவ் ஆகிய இருவருக்கும் 11 ஆண்டுகால சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

குறித்த ரஷ்ய வீரர்கள், வடகிழக்கு கார்கிவ் பகுதியில் உள்ள 2 கிராமங்கள் மீது கிராட் என்ற ஏவுகணைகளை வீசியதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

எனினும் அவர்கள் சார்பில் வாதிட்ட உக்ரேனிய வழக்கறிஞர்கள், “இருவரும் ரஷ்ய இராணுவத்தின் கட்டளைகளைப் பின்பற்றி, நிர்ப்பந்தத்தின் அடிப்படையில் செயற்பட்டனர்” என்று வாதிட்டனர்.

இந்நிலையில், அவர்கள் பொதுமக்கள் உள்ள பகுதிகளில் பீரங்கிகளால் தாக்குதல் நடத்திய குற்றவாளிகள் எனத் தெரிவித்துள்ளதோடு இருவருக்கும் 11ஆண்டுகள் , 6 மாதங்கள் சிறைத்தண்டனை விதித்து நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

அமெரிக்கா



# பட்டமளிப்பு விழாவில் துப்பாக்கிச் சூடு

### பெண் ஒருவர் உயிரிழப்பு

அமெரிக்காவின் லூசியானா மாகாணத்தில், நியூ ஆர்லியன்ஸ் நகரில், நேற்று முன்தினம் (31) நடைபெற்ற மோரிஸ் ஜெஃப் கல்லூரியின் பட்டமளிப்பு விழாவில், மர்ம நபர் ஒருவர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

சம்பவ தினத்தன்று குறித்த பட்டமளிப்பு விழாவில் ஏராளமானோர் கலந்து கொண்டிருந்த நிலையில், அங்கு வந்த மர்ம நபர், அங்கிருந்தவர்கள் மீது கண்மூடித்தனமாகத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளார். இத் தாக்குதலில் வயதான பெண், சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். 2 பேர் காயங்களுக்குள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மியான்மார்

# மெக்சிகோவை சூறையாடிய சூறாவளி

### 10 பேர் உயிரிழப்பு

மெக்சிகோவில் அஹ்சகா மாகாணத்தை தாக்கிய சூறாவளியால் 10 பேர் உயிரிழந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

‘அஹறதா’ என பெயரிடப்பட்டுள்ள இச் சூறாவளி காரணமான 20 பேருக்கும் மேற்பட்டோர் காணாமல் போயுள்ளனர்.

இந்நிலையில் சூறாவளியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் சிக்கியுள்ள மக்களை மீட்கும் பணியில் பேரிடர் மீட்புக் குழுவினர் ஈடுபட்டுத்தப்பட்டுள்ளனர்.



பாரிஸ்



# மாதவிடாய் வலியால் கலங்கிய வீராங்கனை

சீனாவை சேர்ந்த கின்வென் செங் பிரெஞ்சு ஓபன் டென்னிஸ் தொடரின் நான்காவது சுற்றோடு வெளியேறியுள்ளார்

“நான் ஆணாக இருந்திருக்கலாம்” என ஆட்டத்திற்குப் பிறகு அவர் மிகவும் வேதனையுடன் சொல்லியிருந்தார். மாதவிடாய் காலத்தில் ஏற்பட்ட வலி காரணமாகவே அவர், வெளியேற வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

ஒற்றையர் பிரிவுக்கான நான்காவது சுற்றில் டென்னிஸ், உலகின் நம்பர் 1 வீராங்கனையான போலந்து நாட்டின் இகா ஸ்வியாடெக்க்கு எதிராக கின்வென் செங் விளையாடினார். முதல் செட் முடிந்த நிலையில் இரண்டாவது செட்டின்போது அவருக்கு காலில் காயம் ஏற்பட்டது. இதனையடுத்து அவர், மருத்துவ ரீதியான டைம்-அவுட் எடுத்துக் கொண்டார்.

இருந்தாலும் அவரால் ஆட்டத்தில் வெற்றி பெற முடியவில்லை. தோல்விக்கு பிறகு அவர் உருக்கமாக சில விஷயங்களைப் பகிர்ந்தார்.

“எனக்கு காலில் வலி இருந்தது. இருந்தாலும் எனக்கு ஏற்பட்ட வயிற்று வலியுடன் ஒப்பிடும்போது அது பெரிய வலி இல்லை. அந்த வலியுடன் என்னால் விளையாட முடியவில்லை. இது பெண்களின் விஷயம். மாதவிடாய் காலங்களில் முதல் நாள் மிகவும் கடினமானது. அதுவும் இயல்பாகவே முதல் நாளன்று எனக்கு வலி சற்று அதிகம் இருக்கும்.

டென்னிஸ் கோர்ட்டில் நான் விளையாடியபோது நான் ஆணாக இருந்திருக்கலாம் என அந்த தருணம் எண்ணினேன்” என்றார்.

பிரெஞ்ச் ஓபன் டென்னிஸ்

# அரையிறுதியில் டிரெவிசான்



இத்தாலி வீராங்கனை மார்டினா டிரெவிசான், பிரெஞ்ச் ஓபன் கிராண்ட் ஸ்லாம் டென்னிஸ் தொடரின் மகளிர் ஒற்றையர் பிரிவு அரையிறுதியில் விளையாட தகுதி பெற்றுள்ளார்.

காலிறுதியில், கனடாவின் லெய்லா பெர்னாண்டசுடன் (19 வயது, 18வது தரவரிசை) மோதிய டிரெவிசான் (28 வயது, 59வது தரவரிசை) அதிரடியாக விளையாடி 6-2 என்ற கணக்கில் முதல் செட்டை கைப்பற்றி முன்னிலை பெற்றார்.

இரண்டாவது செட்டில் லெய்லா கடும் நெருக்கடி கொடுக்க, ஆட்டம் டை பிரேக்கர் வரை இழுபறியாக நீடித்தது. அதில் அபாரமாக விளையாடிய லெய்லா 7-6 (7-3) என வென்று பதிலடி கொடுக்க, சமநிலை ஏற்பட்டது.

எனினும், 3வது மற்றும் கடைசி செட்டில் லெய்லாவின் சர்வீஸ் ஆட்டங்களை முறியடித்து புள்ளிகளைக் குவித்த டிரெவிசான் 6-2, 6-7 (3-7), 6-3 என்ற செட் கணக்கில் போராடி வென்று அரையிறுதிக்கு முன்னேறினார். சாரா எர்ரானிக்குப் பிறகு (2013) பிரெஞ்ச் ஓபன் அரையிறுதிக்கு முன்னேறிய முதல் இத்தாலிய வீராங்கனை என்ற பெருமை டிரெவிசானுக்கு கிடைத்துள்ளது.

# புதிய தலைவியாக லக்ஷ்மி தெரிவு



இலங்கை கூடைப்பந்து சம்மேளத்தின் புதிய தலைவியாக எதிர்வரும் இரண்டு ஆண்டுகளுக்கு (2022-2024) லக்ஷ்மி விக்டோரியா தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

தலைவி தெரிவுக்காக நடத்தப்பட்ட வாக்கெடுப்பில் 10 மேலதிக வாக்குகளால் அவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

விளையாட்டு அமைச்சின் கேட்போர் கூடத்தில் மே.31ஆம் திகதியன்று நடைபெற்ற வாக்களிப்பில், இலங்கை கூடைப்பந்து சம்மேளனத்தின் 32 உறுப்பினர்கள் பங்கேற்றனர்.

அதில், லக்ஷ்மி விக்டோரியா 21 வாக்குகளையும் எதிர்த்துப் போட்டியிட்ட க்லெரியல் டோசர் 11 வாக்குகளைப் பெற்றார்.

# மாற்றுத்திறனாளிகளுக்கான சாம்பியன்ஷிப் போட்டி

■ சுமனசிறி ஜயதிலக்க



மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய தடகள சாம்பியன்ஷிப் போட்டியின், மொனராகலை மாவட்டத்துக்கான- 2022 போட்டி, மொனராகலை பிரதேச சபை விளையாட்டு மைதானத்தின் மே.31ஆம் திகதியன்று நடைபெற்றது.

மாவட்ட ரீதியில் தெரிவுச் செய்யப்படும் வீர, வீராங்கணைகள், தேசிய மட்டப் போட்டிகளில் இணைத்துக்கொள்ளப்படுவர்.

போட்டி நிகழ்வுகளில் 100 மீ / 200 மீ / 400 மீ, வட்டு எறிதல், ஈட்டி எறிதல், உயரம் பாய்தல், நீளம் பாய்தல் போன்றவை அடங்கியிருந்தன.

முழங்காலுக்கு மேல் அல்லது கீழே உள்ள உறுப்புகள் இல்லாமல் இருத்தல், ஊனம், ஒரு கை மற்றும் முழங்கைக்கு கீழே இழப்பு, 145 சென்றிமீற்றருக்கும் குறைவான உயரம் கொண்ட விளையாட்டு வீரர்கள் மாற்றுத்திறனாளிகளுக்கான பிரிவில் பங்கேற்றிருந்தனர்.





விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டால் வியாழக்கிழமை, 02 ஜூன் 2022, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.